525

525

ஸர்வதாரி வூ } வைகாசி மீ

ஸம்புடம் - 7 { ஸஞ்சிகை - 5

ஸ்ரீ :

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOO[KS]
1 MAY 1948

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்கு மிடம் :

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

3L
இ22 ணவ1, N4
N48·7·5
189246

May 1948
Vol. 7 No. 5

விஷய ஸூசிகை.

				பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	...	...	111
2.	உறக்கம் தவிர்த்த உத்தமி	...	...	115
3.	திருக்கண்டியூர்	...	...	120
4.	மதுராலாபம்	...	...	128
5.	செய்திகள்	...	...	131
6.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	...	...	133
7.	வாஸந்திகா பரிணயம்			

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வதாரி ௵ ஆனி (மிதுந) ௴

14—6—48	1௳	திங்கட்கிழமை	...	சூந்யதிதி; மிதுந ரவி 15-34 [ஸங்க்ரமண தர்ப்பணம்] ஷடசீதி
15—6—48	2௳	செவ்வாய்க்கிழமை		சூந்யதிதி
16—6—48	3௳	புதன்கிழமை	...	மிதுந சுக்ல தசமி திதி
17—6—48	4௳	வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
3—7—48	20௳	சனிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
6—7—48	23௳	செவ்வாய்க்கிழமை		ஸர்வ அமாவாஸ்யை
11—7—48	28௳	ஞாயிற்றுக்கிழமை		பஞ்சமி ஷஷ்டி திதி த்வயம்
12—7—48	29௳	திங்கட்கிழமை	...	மிதுந சுக்ல ஸப்தமி திதி
13—7—48	30௳	செவ்வாய்க்கிழமை		மிதுந சுக்ல அஷ்டமி திதி
14—7—48	31௳	புதன்கிழமை	...	மிதுந சுக்ல நவமி திதி
15—7—48	32௳	வியாழக்கிழமை	...	சூந்ய திதி; தக்ஷிணாயந புண்யகாலம்; கடக ரவி 52-12, [இன்றே தர்ப்பணம்.] ஸ்ரீ பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸர்புடம் 7	ஸர்வதாரி ௵ வைகாசி ௴	ஸஞ்சிகை 5

"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::O::

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

[ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பெற்றுச் சென்ற ஆறு வருஷகாலமாக நடைபெற்றுவரும் சாஸ்த்ர பாடசாலையில், ஆறுவது வார்ஷிக மஹோத்ஸவத்தில் ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்ட திவ்ய ஸூக்திகள்.]

1. उपशान्तकनकमेरुस्थिरशृङ्गाविष्टितकल्याणे ।
विद्यारम्भणायैषा विश्वम्भरसेवोन्मिषिता सदा जयतु ॥

2. कृष्णार्यसूक्तया श्रुत्यवृत्ति श्री अस्तु शिवाय प्रसादप्रेरकः ।
जयतु महोदधिशायिनिवहो विद्यापीठानां सदा श्रियाश्च ॥

3. इत्थं प्रवृत्तं नवीनं सर्वज्ञकरणं ...तात्रचात्रनृसिंहोदये ।
सेवाविधात्रु विद्या दिने दिने वर्धतां जगन्नाथात् ॥

[வார்ஷிகோத்ஸவ காலத்தில், அவ்விடத்தில் ஸந்நிஹிதராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீகார்யம் ஸ்வாமியால் இந்த ச்லோகங்கள் படிக்கப்பட்டன. இந்த ச்லோ கங்களின் கம்பீரமான பொருளை அந்த ஸ்வாமி மிகத் தெளிவாகவும் ரஞ்ஜகமாகவும் வெளியிட்டருளினர். அதற்குப் பிறகே உத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஹயக்ரீவ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

வ்யவஸாயன்:—ப்ருகு வம்ஶம் ரகுவம்ஶம் யதுவம்ஶம் ஆகிய மூன்று வம்ஶங்களி லுதித்த மூன்று ராமர்களுள் நடுநாயகமானவர் மத்யம ராமர். இவராலேயே இந்த விச்வம் முழுவதும் சிறந்த நாதனை யுடையதாக ஆக்கப் பட்டது. இதை ரகுவீரகத்யத்தையே ஸங்க்ரஹமாகக் கொண்டு கூறி விளக்கு கிறார். இந்த ஸூர்யகுல ரத்நம், அயோத்தியில் வாழும் சராசரம் முற்றும் வீடுசேர்த்து உய்விக்கும் மோக்ஷண ஸங்கல்ப ஸூர்யனாய்க் கோஸலையின் மைந்தனாய்த் தோன்றி, 10,100 வர்ஷங்கள் ராஜ்யத்து ப்ரஜைகளை யெல்லாம் தாம் அருகிலிருந்து உபாஸித்து, ராஜ்யத்திலுள்ள சராசரம் முற்றும் கரை யேற்றினான்.

வால்மீகி பகவான் முகத்திலிருந்து ராமாயணம், மதுர மதுரமான மனத்துக் கினிய 24,000 க்ரந்தங்களாக அவதரித்தது. அது ராமாயண ராஜ்ய மாக ஸஜ்ஜநங்களின் ஹ்ருதயத்தை ஆண்டு வருகிறது. வ்யாஸ வேதார்ணவாம் ருதமான வாஸுதேவ கதையை ஸ்வாமி 'யாதவாப்யுதயம்' என்னும் காயத்ரி யின் அக்ஷர ஸங்க்யையுள்ள 24 ஸர்க்க காவ்யத்தால், காளிதாஸ மஹாகவி ரகுவம்சம் பாடியதுபோல், செவிக்கினிய செஞ்சொற் கவிகளாகப் பாடியருளி னார். ராமாயணத்தை ஸ்ரீ நாரத பகவானின் ஸங்க்ஷேபப் பாடல்களைப்போல் 'ரகுவீர கத்ய' மாகப் பாடிய க்ரந்தத்திலிருந்து அநேக ஸம்போதந பதங்கள் மூன்றும் வேற்றுமைப் பதங்களாக மாற்றப்பட்டு இங்கே படிக்கப்பட் டுள்ளன. பவபூதி கவி 'மஹாவீர சரித்ரம்' என்று ராமசரிதம் முழுவதையும் நாடக மாக்கினார். 'மஹாவீர' னென்று ராமனுக்கு அவர் சாத்திய திருநாமத்தையே கைப்பற்றி 'மஹாவீர சரிதம்' என்று தம் கத்யத்திற்கும் ஸ்வாமி திருநாமம் சாத்தினார்; ["பஂத மஹாவீரவைபவம் பாவயே:"]

அயோத்யா காண்ட ஆரம்பத்தில்,

'ஸ நந்த ஸேவ்யவ ப்ரதயெளா யகூூீவாநு யகூூவய ஏநு ।
தைவ்யொாகூூமவி நாயெநு யெநு ஸூா நாயவ ஆவழ ॥'

என்று ப்ரஜா பரிஷத்தில் தசரதர் தம் குமாரனைக் கோஸல ராஜ்யத்திற்கு யுவராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்ய அநுமதி கேட்டபொழுது கூறிய ச்லோகத்தின் ரஸத்திலும் உண்மை உரையிலும் ஈடுபட்டு 'ஸநெநந கிழ' என்று இதிஹாஸ கதந முறையில் தொடங்கி,

'ஹகூஜ நாஹிராஜெண ஸ்ரீராஜெண விஶ்வதெ த நாயீகர தழ'

என்று இங்கே முடிப்பது, தசரதர் அறியாமல் அவர் வாக்கிலிருந்து இந்த

ச்லோக மூலமாக 'இக்கோஸல நாடொன்றுக்கு மட்டுமா இவன் பட்டாபிஷேகம் பெறுவது? மூவுலகங்களுக்கு மல்லவோ இதுவரையிலும் தோன்றாத ஓர் அத்புதப் புது நாதனாகப் பட்டாபிஷேகம் செய்விக்க யோக்யன்' என்று வெளிவந்தது. லோகத்ரய கண்டகரான ராவணாதிகளை நீக்கி, மூவுலகிலுமுள்ள ஸாதுக்களுக்கு அபயமளித்துப் பரித்ராணம் செய்து, ப்ரஹ்ம ருத்ராதி ஸகல தேவர்களும் பூமியில் குழாங்களாகக் கூடி,

'த்ரயாணாம் அபி லோகாநாம் ஆதிகர்த்தா ஸ்வயம்ப்ரபு:'

என்று ப்ரஹ்மதேவர் கூறி, மஹேச்வரரும் 'அயோத்யா ராஜ்யத்தைப் பெற்று இக்ஷ்வாகு வம்சத்தை ப்ரதிஷ்டை செய்துவிட்டு மேலே எழுந்தருளலாம்' என்று சொல்லி, ராமனுக்கு அவ்விடத்தில் தசரதர் ஸேவையைக் காட்ட, தசரதர் ராமனைத் தம் மடிமேல் வைத்து வாரி அணைத்து, 'ராவண வதம் செய்வித்து உன்னை த்ரிலோக நாதனாக ஸேவிக்கவல்லவோ தேவர்கள் உன் யௌவராஜ்யாபிஷேகத்தைத் தடங்கல் செய்தார்கள்; அது அழகே; பரதனோடு கூடி அவன் மநோரத ஸிம்ஹாஸநத்திலேறி நீ அபிஷேகம் செய்துகொள். அவனில்லாமல் நான் அபிஷேகம் கோடித்தது தவறே. என் மநோரதத்திலும் அவன் மநோரதம் தீவ்ரம். ராவண வதம் செய்து தேவர்களை மகிழ்வித்து இப்பொழுது அபிஷேகம் செய்து கொள்வதே உசிதம்' என்றார்.

'அபிராமஸ்ய ராமஸ்ய அபிஷேகம் ச ஸம்மதம்'

என்று பால காண்டம் 3-ம் ஸர்க்கத்தில் வால்மீகியின் ஸங்க்ஷேபத்திலுள்ளதையநுஸரித்து 'அபிராமனாகிய ராமனாலே' என்று இந்தக் கத்ய ஸங்க்ஷேபத்தை முடிக்கிறார்.

ரகுவீர கத்யத்தில் முதலில் கூறிய தாசரதி வைபவத்தைக் குறிக்காமல், இங்கே 'கோஸலஸுதாகுமாரபாவகஞ்சுகிதகாரணாகாரேண' என்று தொடங்குவதில் 'கோஸலோ நாம முதித: ஸ்பீதோ ஜநபதோ மஹாந்' என்று பாலகாண்டம் 5-வது ஸர்க்கத்தில் ராமாயணாக்யாநத்தைத் தொடங்கும் முதல் ச்லோகத்தை ஸூசித்துக்கொண்டு, இந்த ஸங்க்ஷேபத்தைத் தொடங்க நோக்கம் போலும். 'கௌஸல்யாஸுப்ரஜா ராம' என்று தம் தூப்புல் குல கூடஸ்தர் பாடிய ஸுப்ரபாதத்தோடு தொடங்கவும் நோக்கு. விராதன்கூட, ஜ்ஞாந ப்ரபாதம் வருகையில் 'கௌஸல்யா ஸுப்ரஜா ராம' என்று பாடினான். 18-வது ஸர்க்கத்தில் 'கௌஸல்யாஜநயத் ராமம்' 'கௌஸல்யா சுசுபே தேந புத்ரேண' என்ற அவதார ச்லோகங்களை ஸூசித்துக்கொண்டு இந்த அவதார கதையைத் தொடங்குவதும் ரஸமே. பாயஸமான ஷாட்குண்ய விக்ரஹம் கௌஸல்யை கர்ப்பத்தில் புகுந்ததால், ஆதியஞ் சோதியான பரநாராயண விக்ரஹம் அந்தக் கர்ப்பத்தில் ராம விக்ரஹமாகப் பரிணமித்தது. வேதவேத்யனான காரண பரம புருஷனே கௌஸல்யா கர்ப்பத்தினின்று ராம விக்ரஹமாக அவதரித்தான். அவதாரங்கள் நடனைப்போல் பரிக்ரஹிக்கும் பல வேஷங்கள்; கஞ்சுகங்கள், ஆதிகாரண மென்னும் உண்மையை மறைப்பவை; இவற்றை 'கஞ்சுகிதகாரணாகார' என்பதால் முதலிலேயே விளக்குகிறார்.

கோஸல ராஜனுடைய புத்ரி கௌஸல்யை. அவள் ஒரு மநுஷ்ய ராஜன் பெண். அவளுடைய குமாரனாக ஒரு வேஷம். ஸர்வ லோகத்திற்கும் காரணமும் பிதாவுமாகிய பரம்பொருள் ஓர் அரசனுடைய பெண்ணின் குமாரனாக நடிக்கிறது. ஸர்வ ஜகத்காரணமான உண்மையை மறைக்கிறது இந்த வேஷம். பாதிவ்ரத்யத் தவக் கண்ணால் மந்தோதரி பார்க்கையில், அவள் இந்த ஸூக்ஷ்மத்தைக் கண்டு, 'வ்யக்தமாக என் கண் முன்னே ஸநாதந காரண பரமாத்மாவான ஸாக்ஷாத் ஸர்வேச்வரனே நிற்கிறான்' என்று ராமவேஷத்தைக் காரணப் பொருளின் காரணாகாரமே என்று தீர்மானித்து வெளிப்படுத்தினாள். அதன் பிறகு தான் 'ஹவாஜுாராயணொஜெவஃ' என்று ப்ரஹ்மாதி தேவர்கள் அங்கு வந்து ப்ரகாசப்படுத்தினார்கள். இதை 'ஈஜஙிஊஈ ய-வதிஜ நவிஒவ நவஅ ந விவஜாவி தவாஈ௦வயெ-ஊண' என்று மேலே முடிவில் ராவண வதத்திற்குப் பிறகு குறிக்கப்போகிறார். அவதார ரஹஸ்ய மென்னும் தத்வத்தை இங்கே முதலிலேயே விளக்குகிறார்.

'கௌஉாஈ கெஙிஹொவாபி தகௌஶிகாயுஈண'—குமாரஸாவம் குமார வயஸ் என்பது கௌமாரம். 11 வது வயது வரையில் கௌமாரம். 'ஸாஜொ ஷூாஉஶவஷெ-ஊாயஜ' 'ஸஜா தவஜு௦ஜ நஃ ஸ்ரீஊாஜு' என்று மாரீசன் பால்ய தசை யின் சோபையை அநுபவித்து ரஸித்தான். கண்ணனுடைய கௌமார கேளி கள் மிகவும் பல; தசமஸ்கந்தம் இரண்டு பாதிகளாகப் பிரிந்தது. கோகுலத்தில் கோபவேஷமாகக் கோபனைப்போல் ஆசரித்துக்கொண்டு கோபாயிதமான கௌமார கேளிகளின்கதை அதில் முன்பாதி. அவர் கௌமார விளையாட்டுக்கள், கௌஶிக னென்ற பெயருடைய இந்த்ரனுடைய யஜ்ஞத்திற்குப் பங்கம் செய்தன. ராமனுடைய பாலகேளிகளில் கோபனைப்போல வேஷமும் ஆசாரமு மாகிய கோபாயிதம் என்பதே கிடையாது. கௌஶிகருடைய (விச்வாமித்ரருடைய) யஜ்ஞம் ஸம்ரக்ஷணம் செய்யப்பட்டது. இந்த்ரனாகிய கௌஶிகருக்கும் அது ரக்ஷணமே. இப்படி க்ருஷ்ணாவதார கௌமார கேளிகைகளிலிருந்து வேற்றுமையை இங்கே ஶப்த ஶக்தி த்வநியால் காட்டும் ரஸம் ரஸிக்கத்தக்கது. 'கோபாயித' என்பதற்கு 'ரக்ஷிக்கப்பட்ட' என்றும், 'கோபரைப் போல நடந்துவந்த' என்றும் பொருள்கள். 'கௌஶிகர்' என்பது விச்வாமித்ரருக்கும் இந்த்ரனுக்கும் பெயர். கௌஶிகரையும் அவர் யாகத்தையும் 12-வயதுப் பாலகனாக இருக்கையிலேயே ரக்ஷித்தார். மாரீசன் இப்பாலகனுடைய அழகிலும் வீர்யத்திலும் ஈடுபட்டான். ராவணனுக்கு மேற்பட்ட வீரன் அவன். ராவணனையும் கொல்ல ஶக்தனென்று அப்பொழுதே தீர்மானித்துவிட்டான். ராமலக்ஷ்மணர்கள் கௌஶிகரையும், அவரது தபோவநத்தையும், வேள்வியையும் ரக்ஷித்தார்கள். 'நெஜூதா தாத ஊா௦ஹம் த-௦ நயாவிஈண ஈக்ஷிதஃ' என்று மாரீசன் தன்னையும் ரக்ஷித்ததாக ராவணனிடம் சொன்னான். முதலில் சில விசேஷணங்களில் யஜ்ஞ ஸம்பந்தங்கள் குறிக்கப்படுகின்றன. அவதாரம் அச்வமேத யாகத்திலிருந்து. விச்வாமித்ர யஜ்ஞ ஸம்ரக்ஷணமும் யுத்தமும் ஓர் அத்வாரம். கௌஶிக யஜ்ஞ ஸம்ரக்ஷணத்தில் ரண மென்னும் யஜ்ஞத்திற்கு உதவும் திவ்யாஸ்த்ரங்கள் கிடைத்தன. கௌஶிக யஜ்ஞத்திலிருந்தே ஜநகருடைய யஜ்ஞத்

திற்காக மிதிலைக்குச் சென்றார்கள். யஜ்ஞ பூமியிலிருந்து வெளித் தோன்றிய ஸீதையின் பாணிக்ரஹணம்.

ரணாத்வரஸஹாயஸேவாதிவ்யாஸ்த்ராபிநந்திநா—பாலகாண்டத்தில் 26-ம் ஸர்க்கத்தில் தாடகா வதம். அதன் பிறகு விச்வாமித்ரரால் அநேக அஸ்த்ரங்கள் உபதேசிக்கப்பட்டுத் தாநம் செய்யப்பட்டன. அவ்வஸ்த்ரங்களும் ராமனைக் கைகூப்பிப் பணிந்தன. ராமனும் அவைகளை, 'என் மனத்தி லுள்ளவர்களாய் நினைத்தபோது பணி புரியுங்கள்' என்றார். தாடகா வதத்தில் அவள் சிலா வர்ஷத்தை ராமன் தம் அஸ்த்ர ப்ரயோக லாகவத்தால் சரப் பந்தலிட்டுத் தகைந்தார். அப்பொழுது ராகவனுடைய கை வேகத்தையும், லாகவத்தையும் கண்டு விச்வாமித்ரர் ஆச்சர்ய மடைந்ததைக் கம்பநாடர் 'கைவண்ண மங்குக் கண்டேன்' என்று வர்ணித்தார். 'இப்படி ஆச்சர்யமான லளிதத்தையுடைய ராமன் கையிலிருந்து ப்ரயோகித்ததால், தம் அஸ்த்ரங்கள் மிக்க வலியுடன் விளங்கிக் கொடும்பணி செய்யு மென்று நினைத்துத் தாடகாவத மானவுடன் தம் அஸ்த்ரங்கள் ராமனிடம் வந்து சிறப்புறச் செய்ய அவருக்குத் தந்தார்போலும்' என்று ஸ்வாமி இங்கே வ்யஞ்ஜநம் செய்கிறார். 'இவ்வஸ்த்ரங்களால் நமஸ்கரிக்கப்பட்டார்' என்று 'திவ்யாஸ்த்ரைரபிவந்தித' என்னும் ஸம்போதநத்தால் ஸ்வாமி ரகுவீரகத்யத்தில் குறிக்கிறார். இங்கே இதை 'திவ்யாஸ்த்ராபிநந்திநா' [திவ்யாஸ்த்ரங்கள் இவரைச் சேர்ந்து புகழ்பெற்று விளங்கின] என்று பொருள்படும்படி மாற்றியது கவனிக்கத்தக்கது. 'திவ்யாஸ்த்ராணி யஸ்ய அபிநந்தகாநி' என்று பஹுவ்ரீஹி. 'ஶரீரே தவ பஶ்யாமி ஜகத் ஸர்வமிதம் ப்ரபோ' என்று காச்யபர் வாமனரைப் பெறுமுன், 'மதுஸூதநரே! உம் சரீரத்தில் உலக முழுவதையும் காண்கிறேன்' எனக் கூறியதை 29-ம் ஸர்க்கத்தில் விச்வாமித்ரர் ராமனிடம் கூறுகிறார். இவர் கொடுக்கும் அஸ்த்ரங்கள் உண்மையில் முன்பே ராமனிட முள்ளவைகளே. 'கௌஶிகாத்வர' என்று கௌசிகர் யாகத்தைப் பேசியவுடனே 'ரணாத்வர' என்று யுத்த யாகத்தைப் பேசுவதால், விச்வாமித்ரருக்கு இரண்டு விதமான யாகங்களிலும் ஸம்பந்த முண்டென்பதை ஸூசிக்கிறார். ஹவிர்ப்பாகத்திலிறங்கி ப்ரஹ்மர்ஷி நிலையிலேயே இருந்துவிட்டதால், யுத்த மென்னும் யாகத்தை நிர்வஹிக்கும் பழைய திவ்யாஸ்த்ரங்கள் அவருக்குச் சுமையா யிருந்ததையும் ஸூசிக்கிறார். ரணாத்வரத்தில் ஸேவகம் செய்ய ராமன் அவதரித்தது. 'ரணாத்வரஸஹாய' என்பதால் யஜ்ஞ மென்னும் அத்வரத்தில் அவச்ய மில்லாதவை என்பது ஸூசிக்கப்படுகிறது. 'ஸஹாய' என்பதால், கார்ய காலங்களில் ஸஹாயம் செய்யும்படி ராமன் கூறியதையும், 'ஸேவாதிவ்ய' என்பதால், 'திவ்ய பாஸ்வர தேஹங்களோடு அஸ்த்ரங்கள் அஞ்ஜலி செய்து 'இதோ நாங்கள் பவ்யரான ஸேவகர்கள்; என்ன பணி செய்யவேண்டும்? என்று விண்ணப்பித்ததையும் ஸூசிக்கிறார்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

உறக்கம் தவிர்த்த உத்தமி

[ஸம்புடம் 7,—ஸஞ்சிகை 3-ன் தொடர்ச்சி]

[பண்டிட். ஸ்ரீ. உப. என். எஸ். தாதாசாரி.]

'கதவைத் தட்டி எழுப்புவது' என்னும் முறையைப் பத்தாம் பாட்டிலும், 'அசைத் தெழுப்புவது' என்ற முறையை ஒன்பதாம் பாட்டிலும், 'கதவு திறக்கக் குறை கூறிப் பேசுவது' என்ற முறையைப் பதினோராம் பாட்டிலும், 'நிந்தித்துக் கதவைத் திறக்கச் சொல்வது' என்பதைப் பதினாலாம் பாட்டிலும், 'இன்சொலால் உள்ளம் குளிரப் பேசிக் கதவைத் திறக்கச்சொல்லும் முறையைப் பதின்மூன்றும் பாட்டிலும், 'முகஸ்துதி செய்து கதவைத் திறக்கவைக்கும் முறை'யைப் பன்னிரண்டாம் பாட்டிலும், 'வாதம் செய்து கதவைத் திறக்க வைக்கும் முறை'யைப் பதினைந்தாம் பாட்டிலும் கையாண்டிருக்கிறாள் காசினி போற்றும் கோதை. இது வல்லவோ பரமாசார்யன் பரமோபகாரம். நம்மை உறக்கத்திலிருந்து பல முறையைக் கையாண்டு எழுப்பியவள், நம் உண்மை ஸ்வரூபத்தையும் (அந்தர் யாமியையும்) காட்டினாள்.

மனிதனுக்கு எண்சாண் உடம்பு. இதோடு மனிதத்தன்மை (ஜீவதத்வம்) உடம்புடன் முடிவுபெற்று விடுகிறதா? இல்லை. உடம்பின் உள்ளே நம்மையும் அறியாமல்—இல்லை—நம்மால் இருந்தும் அறியப்படாமல்—மங்கி நொங்கி வாடும் ஒருவித சக்தி இருக்கிறது. அதனுடைய பெருமை அதை உணர்ந்தால்தான் புலப்படும். அப்பொழுதுதான் மனிதன் மனிதனாகிறான்; ம்ருகங்களிலிருந்தும் வேறுபடுகிறான். மனிதன் தன் ஹ்ருதயாகாசத்தில் உறைந்திருக்கும் ஒப்பிலா ப்ரணவப்பொருளை அறிந்தால், மனிதன் மண்ணுலகில் மனிதனாகப் பிறந்ததின் பயனை எய்துகிறான். இச்சக்தியைத்தான் 'அந்தர்யாமி' என்று அழைக்கிறோம். நம் நாட்டில் இன்றும் என்றும் சிறந்து விளங்கும் எம்மதமும் இவ்வுண்மையையே அடிப்படையாகக் கொண்டது. இவ்வுண்மையைச் சிலர் சில ஸமயம் நினைவுக்குக் கொண்டு வருவதுண்டு. ஆனால் சிறிது ஊன்றிச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. கேவலம் நினைப்பால் அவ்வுத்தம வள்ளல் மின்னல் காட்சிதான் அளிப்பான். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அவன் கதிர் மதியம்போல் தோன்றிக் கருணைபுரிவன். இந்தத் தைவத்தன்மை உண்மையில் ஆராய்ந்தறிய வேண்டிய ஒரு தத்வம். இதைப்பற்றி நம் பெரியோர்கள் பறைசாற்றிப் போந்தார்கள். அதற்காக நாம் அவர்களைப் போற்றி யுகந்து, புத்தியில் கொண்டு, அவர்கள் புகழ்களைச் சாற்றி வளர்க்கவேண்டும். 'அந்த: ப்ரவிஶ்ய பூதாநி' [ஒவ்வொரு படைப்புப் பொருள்களிலும் உள்ளே புகுந்து] என்பதுபோல; உள்ளிருந்து

கர்மாநுகுணமான பலப்ரதாநம் செய்து தன்னடி காட்டுகிறது அத்தனிப் பொருள். இதைக்காட்டிலும் ஸர்வைக்யத்திக்கு வேறு வழியுண்டா? இந்த ஶரீர ஶரீரி பாவத்தைக் காட்டிலும் ஸர்வமத ஸர்வஜந ஐக்யத்தை வேறு எந்த தத்வம்தான் போதிக்கக்கூடும்.?

நம் முன்னோர்கள் நமக்கு அழியாச் செல்வமாய்க் கண்டுவைத்த உப நிஷத்தின் முதல் ஸூக்தியைப் பாருங்கள்.

“ ஈஶாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத் ।
தேந த்யக்தேந புஞ்ஜீதா: மாக்ருத: கஸ்யஸ்வித் தநம் ॥ ”

[இவ்வுலகம் முழுவதும் அப்பரந்தாமனை அந்தர்யாமியாய் உள்ளே கொண்டிருக்கிறது. ஆகவே ஒரு கார்யத்திலும் கர்த்ருத்வ புத்தியைவிட்டு அவனிடத்திலேயே ஸாத்விக த்யாகம் செய்து ஸம்ஸார தஶையில் யாவரும் இருக்கவேண்டும்.]

‘கர்த்தா காரயிதா ச ஸ:’ என்னும்படியான அவனை விட்டு அவனுடைய வஸ்துவை அவனுக்கே அன்றி, ஒருவன் தன்னுடையதாக்க முயல்வது திருட்டுத்தன மன்றோ? மேலே கூறப்பட்ட உபநிஷத்தில் ‘யத்கிஞ்ச’ என்ற பதத்தில் பொழிந்து மின்னும் கருத்து கவனிக்கத்தக்கது. ஜடவஸ்துவினுள்ளும் அவன் வீற்றிருக்கிறான். ‘த்யக்தேந’-உடல்தான்; உடலன்றி வேறொன்று மில்லை என்ற மனப்பான்மையை விட்டு, உடலின் உள்ளே உபயவிபூதி நிர்வாஹகன் ஸர்வஶக்தனாகவும், ஸத்யனாகவும், ஆநந்தமயனாகவும், ஸர்வஜ்ஞனாகவும் கோயில்கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து ஜீவயாத்ரை நடத்தவேண்டும். இது அவ்வுபநிஷத்தில் அருமையாகக் கூறப்பட்டிருக்கிறது. பயிரை எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அதன் விதையை விதைக்கலாம்; நீரிடலாம்; உரம் போடலாம்; ஆனால் பிற்காலத்தில் பாரளாவிப் படரும் விதைச் சத்தை விரிவடையச் செய்ய முடியுமா? அதற்குள் அணுவிலும் அணுவான தைவ சக்தி தேங்கிக் கிடக்கிறது. ஆகவே, இந்தத் தைவ தத்வத்தை நாம் உணராவிட்டால், நமக்கே நாம் உண்மையாகமாட்டோம். இவ்வுணர்ச்சியை நடைமுறை வாழ்க்கையிலும் நாம் பொருத்திக்கொள்ளவேண்டும். இவ்வுண்மை ரத்த ஓட்டம்போல் இடைவிடாமல் நம் உடலில் ஓடிக்கொண்டிருக்க வேண்டும். இதை உணர்வதே பேரின்பம். உணராதவர்களுக்கு அங்குமில்லை ஆநந்தம்; இங்கு மில்லை இன்பம்.

ஆம்: உண்மை. ‘உள்ளத்தே இச்சக்தி தேங்கியிருக்கிறது. என் அது எளிதில் கருத்திற்குப் புலப்படவில்லை?’ என்று தோன்றலாம். தூங்குகிறவனுக்கு வெளியில் நடப்பது புலப்படுகிறதா? அவ்விதமேதான் நாம் இன்று தூங்குகிறோம்; இது உடல் தூக்கமில்லை. இது ஒரு ஆன்ம உறக்கம். இத்தூக்கத்திலிருந்து நாம் எழ முயலவேண்டும். எழுந்தால் காணலாம் காரொளிவண்ணனை.

இப்பொழுது நான் பேசும் விஷயத்திற்கும், கோதை தொகுத்த திருப்பாவைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவள் பாவை வ்ரதம் [காத்யாயநீ வ்ரதம்] மேற்கொண்டாள். ஆயர்பாடியில் பெண்கள் அனைவரையும் உறக்கத்திலிருந்து எழுப்புகிறாள். அதையே கவிபாடுகிறாள். மெய்யறிவு செறிந்த இம்மங்கை தன்னையும் மறந்து மெய்ந்நெறி யறியா மன்னுலகில் வாழும் மாந்தரனைவரையும் தட்டி எழுப்புகிறாள். திட்டிக் கூப்பிடுகிறாள். மெய்யனைக் காட்டி அருளுகிறாள். அவன் மெய்யர்க்கு மெய்யன்; பொய்யர்க்குப் பொய்யன். முதலிலே உறக்கம் தவிர்த்தாள். கருணைவள்ளல் ஆண்டாளின் பேரரவம் கேட்டுத் துயிலெழுந்தோம். எழுந்தது போதாது. 'உள்ளேயும் நோக்குங்கள்' என்கிறாள் நம் உத்தமி. 16 முதல் 25 பாட்டுக்கள் வரையில் இக்கருத்தையே வெளியிடுகிறாள் மாயனையும் மயக்கிய மருள்விழிமங்கை.

நம் உடல் ஓர் ஆலயம். அகன்றுயர்ந்த வெளி ஆலயத்திற்கும் இதற்கும் வாசி உண்டு. அங்கும் கோபியர் உள்ளக்கள்வன் கோப்புடைய சீரிய சிங்காதனத்தில் வீற்றிருக்கிறான். நம் உள்ளத்தேயும் அவன் நடமாடும் கோயில் கொண்டிருக்கிறான். அவன் அர்ச்சைவடிவம் கொண்டுள்ளான்; இவன் அந்தர்யாமி வடிவம் கொண்டுள்ளான். அவனைச் சென்றால் காணலாம்; இவனை இருந்தே காணலாம். அவன் கேட்டதிற்கு உடனே விடை கொடான்; இவனை அறிந்துகேட்டால் சட்டென ஆராய்ந்தருள்வான். அவன் மகிழத் துதிக்க வேண்டும்; இவன் மகிழ உணரவேண்டும். ஆயினும் என்ன? உறங்கினால் உண்மை காண முடியுமா? அருகில் அருள ஆயத்தமாய் இருக்கும் அவனுக்குத் தூக்கத்திரை இடலாமா? எதிரே ஜ்வலித்துக்கொண்டிருக்கும் திருவிளக்கைத் திரையிட்டு மறைத்து இருளில் தடமாடலாமா? அவனைக் காண்பது நம் பொருப்பல்லவா? கண்டதால் அவனுக் காவதென்ன? நாமல்லவா நன்மை அடைகிறோம். 'உறங்குகிறோம்' என்றுவது உணர்ந்தால் போதும். உறக்கம் தானாகவே கலைந்துவிடும். கலைந்தால் போதும்; கள்வனை (அந்தர்யாமியைக்) காணலாம். அவன் அணுவிலும் அணுவாய் வீற்றிருக்கிறான். இந்த அணுகுண்டு சகாப்தத்திலும் அவன் பெருமை அறியாவண்ண மிருப்பது என்ன விந்தை! அணுகுண்டின் அபார சக்தியை நாம் அறியவில்லையா? அவன் அதனுள்ளும் அமைந்திருக்காவிடில் அணுவின் அபார சக்தி எவ்விதம் விரியும்? அது பற்பல விதமாய்ப் பிரிந்திருந்தாலும் பூரணமாகவே இருக்கிறது. 'பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே' என்ற ஸ்ரீஸூக்தியைக் கவனிக்க வேண்டும். புராணங்களிலும் மற்றை க்ரந்தங்களிலும் 'யோகநித்ரா' என்பது கூறியிருப்பது நமக்குத் தெரியும். யோக:—ஆத்ம ஜ்ஞாநம்; நித்ரா—அதில் உறக்கம். ஆகவே: ஆத்மஜ்ஞான மன்றிக்கே ஓர் உறக்கம் எற்படுகிறது என்பது இதனால் ஸூசித மாகவில்லையா? பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் ஸம்ஹார தசையில் யோகநித்ரை புரிகிறான். தூக்கம் முடிந்ததும் ஜகத் ஸ்ருஷ்டி. நாமும் இந்த உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டால் புதிய எழுச்சியை (உலகத்தை) உணர்கிறோம். அதாவது: நாம் தைவ ஸம்பத்தைப் பெறு

ஆலயமும் உள்ளமும்

கிறோம். இதுவும் ஓர் அபார ஸ்ருஷ்டி கல்பம்தானே. தம் அருமைக் கவிதையால் அனைவரையும் ஆட்கொள்ளும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி பரமனடி பாடி, செய்யுண்ணாமலும் பாலுண்ணாமலும் படுத்துறங்கும் பாங்கிகளை நீராட எழுப்புகிறாள்.

வேதாந்த விஜ்ஞான ஸம்பந்நர்கள் இதைத் தினவறச் சர்ச்சை செய்து ஸாதிக்கிறார்கள். அதில் சிலரே இதைச் செயலளவில் செய்து வெற்றி பெறுகிறார்கள். இதைப் பற்றிய பேச்சு வேண்டாம். வாதம் வேண்டாம். அநுபவம் அனைத்திலும் மிக முக்யம். இந்த வையம் முழுவதும் ஒரு தொழிற்சாலை. அதில் நாம் பரந்தாமனால் அமர்த்தப்பட்ட தொழிலாளிகள். தொழிலாளிகள் வேலை செய்ய மறுத்துச் சம்பளம் மட்டும் பெற நினைக்கலாமா? மில் முதலாளி நம்மை விடுவனா? நம் திருமாமணி மண்டபத்துத் திவ்ய முதலாளி அஜ்ஞாத நிக்ரஹன் என்பது உண்மையே. இருந்தும் ஜகத் கார்யம் என்பது ஒரு லீலையானதால், லீலாலம்படன் கண்ணன், செயலுக்குத் தக்க பல ப்ரதானம்தான் செய்வன். அவன் அருள் பெறவேண்டாமா? நமக்கு அவனல்லவோ அருந்துணைவன்? அவனன்றி நமக்கு வேறென்ன வேண்டும்? ஆகவே: நம் நப்பின்னை நாதன் நன்மதிப்பை நம்மை உணர்ந்து பெறுவோம்.

பரமாசார்யன் ஸ்ரீ பார்த்தஸாரதி நமக்கீந்த கீதையிலிருந்தும் ஒரு மேன்கோள் கூற விரும்புகிறேன். போர்க்களத்தில் பேதையை கொண்டான் பார்த்தன். மனம் தொட்டிலி லிட்ட தங்கக்கிளிபோல் ஊசலாடிற்று. வழி புரியவில்லை. ஏங்கினான். எழுந்தான். எதிரே கண்டான் ஏழை நேசனை. சரண் புகுந்தான். ஸம்சயம் கேட்டான். தன்னை அடைந்து அடைக்கலம் புகுந்து கேட்பவனுக்கா அது விடையளிக்காது? ஸாரதமமான தத்வத்தை எடுத்து உபதேசித்தது ஒப்பில்லா உண்மைப் பொருள்.

> “ 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌦𑍇𑌶𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
> ....
> 𑌤𑌮𑍇𑌵 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛 .... 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌮𑍍 ॥ ”

கீதை முழுவதிலும் ‘நான் நான்’ என்று அஸ்மத் ஶப்த நிர்த்தேஶம் செய்து கொண்டே இருக்கும் கீதாசார்யன், இவ்விடத்தில் ‘𑌤𑌮𑍍’ என்று ப்ரதமபுருஷ ப்ரயோகம் செய்ததன்றி, ஸம்ஶய விபர்யய அந்யதா ஜ்ஞாநங்கள் அற ‘𑌏𑌵’ என நிர்த்தாரணத்தையும் உணர்த்தினான். ‘𑌹𑍃𑌦𑍍𑌦𑍇𑌶𑍇 𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿’ ‘யதி நாம உபிநாவா’ என்று லீலாசுகர் கூறியபடி, அவனுக்கு நம் ஹ்ருத் புண்டரீகம் அன்றோ போக்ய பர்யங்காஸநம்? யந்த்ரம், ஓட்டும் சக்தியின்றி ஓடுமா? அதுபோல, நம் உடல் ஓர் அத்புதமான ஓடி ஓடிப் பல பிறப்பின் பின் கிடைத்த யந்த்ர மன்றோ? அவனே இந்த யந்த்ரத்தின் பரமசக்தி. நாம் உண்பதும் அல்லவதும் அவனலன்றோ? இப்படி, பரமோபகாரபரனான அவனை ஒரு நிமிஷமாவது சிந்திக்கவேண்டாமா?

இத்தகைய பேருண்மையைத் தம் பாவையில் இழைத்திருக்கிறாள் பைங்கிளிச் சிற்பி. இப்பாடல்களில் 6 முதல் 15 வரை உள்ள பாட்டுக்களில்

அவ்வுத்தமி நம் உறக்கம் தவிர்க்கிருள். 16 முதல் 25 வரை பாட்டுக்களின் உண்மையை (அந்தர்யாமியைக்) காட்டுகிருள்.

முதலில் ஆயர்பாடியில் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு கூடிவிட்டனர். கடைசியில் கண்ணன் திருமாளிகையை அடைகிருர்கள் அனைவரும். ஆகவே நாமும் உறங்கி எழுந்தபின் நம் உள்ளக் கோயிலானை அணுகி அவனைக் காணவேண்டும். ஒருங்கே கூடி மைத் தடங்கண்ணிகள் நந்தகோபன் அரண்மனையை அடைகிருர்கள். கோயில் காப்பவனும் தோரண வாயில் காப்பவனும் அவர்களைத் தடுக்கிருர்கள். அவர்களை இறைஞ்சி மணிக் கதவத் தாளைத் திறக்க வேண்டுகிருர்கள். 'அவன் காலையிலே வர எங்களுக்கு அநுமதி கொடுத்திருக்கிருன்; நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பனுறுைம் எழுந்திருப்பன்' என்கிருர்கள். தைவதன்மை பரமாய் ஆராயுங்கால், இதைவிட ஆத்ம தத்வத்தை அழகாக உபதேசிக்க முடியுமா? அந்த வாயில் காப்பவனைப்போல் நம்மையும், நம் உள்ளே உணர விடாமல் தடுப்பது நம் அகந்தை என எனக்குத் தோன்றுகிறது. என்ன எழுப்பியும் எழுந்திராத ஆண்டாள் அவனை உணர்த்த, நப்பின்னைப் பிராட்டியை எசிப்பேசி அழைக்கிருர்கள். இங்கு நப்பின்னை சேதநவர்க்கங்களுக்குத் தேசிகோத்தமன் போல் புருஷகாரமாய் அமர்ந்தனள். ஆயர்நேசன், ஆபத்பாந்தவன், இவ் விதம் பள்ளிக்கட்டிலின் கீழே சங்க மிருப்பார்போல் நிற்கும் நோன்புப் பெண் களையா வஞ்சிப்பன்? எழுந்தான் எழில் மணிவண்ணன். கண்டனர் பெண்கள் காயம்பூ மேனியனை. அச்சமயம் கண்டதைக் கண்டவாறு சிதருமல் எடுத்து உரைக்கிருள். 'மாரிக் காலத்தில் மலையடிவாரத்தில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து, வேரிமயிர் பொங்க வெப்பாடும் பேர்ந் துதறி மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டதுபோல் புறப்பட்டது நம் நரசிங் கம்' என்கிருள். இங்கு நடமாடிய சிங்கம் மற்ருெரு அரி ஆஸனம் ஏறுகிறது. மனமும் கண்களும் போட்டியிட்டு அவனை அநுபவிக்கின்றன. பழம்பொ ருள் புதுப்பொருளாகிவிடுகிறது. பரிவு ஏற்படுகிறது. பேதமை பலம் பெறு கிறது. 'அவனுக்கா ஆசி கூறுவது?' என்றுகூடத் தோன்றவில்லை. 'கண்ணெச்சில் படுமோ? சொல்லெச்சில் படுமோ?' என அச்சப்படுகிருள். அவள் பட்டர் பிரான் மகளல்லவா? பல்லாண்டு பாடிய பாகவதோத்தம னின் அரும் தவப் புதல்வி அல்லவா? தந்தை வழியைப் பின் பற்றுகிருள். அச் சிங்கத்திற்குப் 'போற்றி' கூறத் தொடங்கிவிட்டாள். கடைசியில் தன் னறிவு பெறுகிருள். அவன் அக்கவும் அழிக்கவும் ஆக்கம் பெற்றவ னல்லவா? ஓரிரவில் ஒருத்தி மகனய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளிந்து வளர்ந்த அகடித கடநா சக்தி வாய்ந்தவ னல்லவா? அவனுடைய ஸர்வசக்தியை உணர்ந்துவிடு கிருள். இதையே நாம் தைவதன்மை விஷயத்திலும் ஒத்துப் பார்க்கவேண் டும். நம்முன் னிருக்கும் தேங்கிய சக்தியை நாம் அற்பமாய் நினைக்காமல் நன்கு உணர்ந்தால், அன்னை ஆண்டாள் கண்டதுபோல் முடிவில் நாமும் அவ னுடைய ஸர்வ சக்தியைக் காணலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

திருக்கண்டியூர்

[திருப்பூந்துருத்தி. ஸ்ரீ. உப. V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A., மேல் மாம்பலம்]

பொழுது போக்காக வாசிக்கலாம் என்று ஒரு புஸ்தகம் எடுக்க அலமாரியில் கையை வைத்தேன். கைவைத்தவுடன் முதலில் கிடைத்த புஸ்தகம் திருக்கண்டியூர் திவ்ய தேசத்தின் மாஹாத்ம்யமாக இருந்தது. புஸ்தகத்தை எடுத்தவுடன் உடம்பில் மயிர்க்கூச்ச லெடுத்தது. சிறிது நேரம் பரவசமாய் மெய்ம்மறந்து நின்றேன்.

திவ்ய தேசங்களி லெல்லாம் பெருமாள்தான் ஸேவை ஸாதிக்கிறார் என்றாலும், தஞ்சாவூர் ஜில்லா வாஸிகளுக்கு—அதிலும் ஸ்ரீவைஷ்ணவர்களாயிருப்பார்களுக்கு—திருக்கண்டியூர்ப் பெருமாளிடம் விசேஷமான ஈடுபாடு இருந்து வருகிறது. பிராட்டிமார்களோடு சேர்ந்த திருக்கோலத்தில் இந்த எம்பெருமானை ஸேவித்தவர்கள், பெருமாளுடைய திருமேனி யழகில் ஈடுபட்டு, ருக்மிணீ ஸத்யபாமையுடன் கூடின கண்ணபிரானே விபவத்தில் எதிரில் நிற்பது போலவும் பேசுவது போலவும் அநுக்ரஹிப்பது போலவும் பரவசமடைகின்றார்கள்.

உத்ஸவ காலங்களில் இந்த எம்பெருமான் திருவோலக்கத்தில் காணும் வைதிக ஸ்ரீயின் சோபையைப் பிறிதோரிடத்தில் காணமுடியாது. இவ்வளவுக்கும் இந்தத் திவ்ய தேசத்தில் உள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களின் திருமாளிகைகள் மிகவும் ஸ்வல்பமே. அயலூர்களிலிருந்து ஸம்பாவனைபண்ணி வேதபாராயணத்துத்துக்கும் அத்யாபகத்துக்கும் ஸ்வாமிகள் தருவிப்பதற்கு முடிகிறதில்லை. அந்தந்த ஸ்வாமிகள் தாங்கள் தாங்களே கைச் செலவு செய்துகொண்டு வந்து ஸ்வயம் ப்ரயோஜநமாக வேதபாராயண கைங்கர்யம் செய்துவிட்டுப் போவதுண்டு.

இற்றைக்கு ஸுமார் 15-வருஷங்களுக்கு முன்பு, ஒரு தடவை இவ்வெம்பெருமானை ஸேவிக்கும் பாக்யம் அடியேனுக்குக் கிடைத்தது. அதற்கப்புறமும் அநேக தடவைகள் ஸேவித்திருக்கிறேன். எனினும் அன்று என் மனத்தில் உண்டாகிய ஆநந்தாநுபவத்தை அதற்கு முன்னும் பின்னும் ஒரு தடவையும் அனுபவித்ததில்லை. அது வாசாமகோசரம்.

அன்று ஸ்ரீ நாச்சியார் திருமொழியின் கடைசிப் பதிகத்தை அநுஸந்தித்துக்கொண்டிருந்தேன். அப்போது திருவத்யயந உத்ஸவம் என்று ஞாபகம். பெருமாள் திருவோலக்கத்தில் வேத பாராயணம் நடந்துகொண்

டிருந்தது. திடீரென்று யாரோ வொருவர் எதிரே கையைக் காட்டினார். தலையை நிமிர்த்தி நோக்கினேன். என்ன ஆச்சர்யம்! மந்த்ரவாதி ஒருவன் தன் மந்த்ர சக்தியினால் இந்த்ரஜால வித்தைகளைக் காண்பித்திருந்தாலும் அவைகளைக் கண்டு அவ்வளவு ஆச்சரிய மடைந்திருக்கமாட்டேன். நான் எதிரில் கண்ட ஆனந்தக் காட்சி அவ்வாறிருந்தது. 15-வருஷங்களுக்குப் பின்னால் இன்று அதை நினைக்கும்போதும் உடம்பில் மயிர்க்கூச்சல் எடுக்கின்றது. எதிரில் நான் கண்ட காட்சிதானென்ன ?

கண்ணபெருமான் ஸர்வாலங்கார பூஷிதனாகக் கோப கோபியர்களோடு அங்கே விளையாடுவதை கண்டேன். பசுமாடுகளும் காளைமாடுகளும் கன்றுக்குட்டிகளும் அங்கே துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. கண்ணன் வேணுகானம் செய்தார். ஓரிடத்தில் ராஸக்ரீடை உத்ஸவமும், மற்றோரிடத்தில் கோபிகளின் வஸ்த்ராபஹரணமும் நடந்துகொண்டிருந்தன. சில இடையர்கள் யமுனையாற்றின் வெண்மணல் திட்டுகளில் கண்ணன் கூறும் வேடிக்கைக் கதைகளைக் கேட்டுக்கொண்டே ஆநந்த மிகுதியினால் கையிலுள்ள தத்யோதனத்தைச் சாப்பிடுவதையும் மறந்து, சிரித்துக்கொண்டும் குதித்துக்கொண்டும் நின்றார்கள். தேனுகன், காளியன், குவலயாபீடம் முதலிய அஸுரர்களையும் ஆஸுர ப்ரக்ருதிகளையும் வேட்டையாடியதும் ஸேவையாயிற்று.

இத்தகைய ஆநந்தானுபவத்துக் கிடையில் அங்குச் சில ரிஷிகள் வந்தார்கள். தாடியும் ஜடையும் காஷாயமும் கமண்டலமும் உடம்பெல்லாம் ஊர்த்வ புண்ட்ரமும் வற்றின உடலும் வற்றாத பக்தியுமாக ஸேவை ஸாதித்தார்கள் அம்மஹான்கள். "நாங்கள் பெருமாளை ஸேவிக்கவேண்டி ஸ்ரீ வைகுண்ட லோகத்துக்குச் சென்றோம். அங்கே அவரைக் காண முடியவில்லை. விசாரித்ததில், விளையாட்டில் ருசி பிறந்து அவர் லீலா விபூதிக்கு வந்திருக்கிறார் என்று தெரிந்தது. 'என்ன விளையாட்டு விளையாடுகிறார்?' என்று கேட்டோம். 'உலகங்களை யெல்லாம் ஸ்ருஷ்டிக்கிற விளையாட்டு' என்றார்கள். 'அதை யெப்படிச் செய்கிறார்?' என்று கேட்டோம். 'முதலில் பிரமனை ஸ்ருஷ்டித்தார். அவருக்கு வேதங்களை யெல்லாம் உபதேசம் பண்ணினார். அவர் இருப்பதற்குத் தம்முடைய உந்தியாகிற தாமரைப் பூவில் ஒரு வீட்டைப் பண்ணிக் கொடுத்தார். பிறகு 'நீ உலகங்களை யெல்லாம் ஸ்ருஷ்டி செய்' என்று அவருக்கு நியமித்து, அவர் விதம்விதமாக ஸ்ருஷ்டி செய்கிற அழகைக் கண்டு மகிழ்கிறார்' என்றார்கள். 'இவ்வாறு விளையாடிக்கொண்டிருக்கும் பரமாத்மா இந்த வழியாக வந்தார் என்று கேள்விப்பட்டு அவரைத் தேடிக்கொண்டு இங்கே வந்தோம். நீங்கள் அவரைப் பார்த்தீர்களா?" என்று எதிரில் நின்ற பக்தர்கள் கூட்டத்தை நோக்கிக் கேட்டார்கள் அவர்கள்.

இதைக் கேட்ட அந்தப் பக்தர்கள், "நீங்கள் சொல்லுகிற பரமாத்மா இந்தப் பக்கம் வரவும் இல்லை ; அவரை நாங்கள் காணவும் இல்லை. இங்கே வேறொருவரைத்தான் நாங்கள் பார்த்தோம். இவரும் விளையாடிக்கொண்டு

தான் இருந்தார். ஆனால் நீங்கள் சொல்லுகிற பரத்வத்துக்கு நேர் எதிரிடையான ஸௌலப்யம் இவரிடம் குடிகொண்டிருந்தது. மாடுகளையும் கன்றுகளையும் ஓட்டிக்கொண்டும், புல்லாங்குழல் இசைத்துக்கொண்டும், இடையர்கள் இடைச்சியர்கள் இவர்களுடைய தோள்மேல் தோள்போட்டுக்கொண்டும் விளையாடிக்கொண்டிருந்தார் இவர். அப்போது இவருக்குத் தீங்கு செய்ய விரும்பிச் சில ஆஸுர ப்ரக்ருதிகள் பல வடிவங்களுடன் இங்கே வந்தார்கள். ஆனால் இவரோ விளையாட்டாகவே அவர்கள் அனைவரையும் வேட்டையாடி விட்டார். இந்த ஸௌலப்ய மூர்த்தியை ஸேவித்த நாங்கள் பரவசரானபடியால் வேறொன்றையும் காண இயலவில்லை. நீங்கள் சொல்லுகிற பரமாத்ம மூர்த்தி எங்களுக்கெதிரில் வந்திருந்தால்கூட நாங்கள் அவரைப் பார்த்திருக்க மாட்டோம்” என்றார்கள்.

‘நீங்கள் பார்த்த ஸௌலப்ய மூர்த்தி எங்கே?’ என்று ரிஷிகள் கேட்க, ‘அதோ’ என்று கையைக் காட்டினார்கள் பக்தர்கள். நானும் அந்தப் பக்கம் பார்த்தேன். அங்கே தம்முடைய தேவிமார்களோடு ஸ்ரீ ஹரசாப விமோசநப் பெருமாள் ஸேவை ஸாதித்துக்கொண்டிருந்தார். ‘இவர்தான் நாங்கள் தேடிவரும் பரதேவதை’ யென்று ரிஷிகள் ஸேவித்துப் போற்றினார்கள். ‘இவர்தான் எங்கள் ஸௌலப்ய மூர்த்தி’ யென்று பக்தர்கள் கொண்டாடினார்கள். எல்லாரும் சேர்ந்து உச்ச ஸ்வரத்தில வேதகோஷம் செய்து பெருமாளைப் போற்றினார்கள். வேதகோஷம் நடைபெற்று முடிந்தது. நானும் ஸ்வய உணர்வு பெற்றேன்.

நாச்சியார் திருமொழியின் அநுஸந்தாநத்தால் இந்த மாநஸாநுபவம் உண்டாயிற்றோ, அல்லது அங்குக் கேட்ட வேத கோஷத்தின் இன்ப உணர்ச்சியின் அநுபவம்தான் அவ்வாறு என்னை மயக்கியதோ அறியேன். காரணம் எதுவானால்என்ன? நான் பரவச மடைந்தது மாத்திரம் உண்மை. பின்னால் நடந்ததெல்லாம் எனக்கு ஒரு கனவுபோல்தான் தோன்றுகிறது. பிறகு பெருமாள் தீர்த்தம் ஸ்ரீ சடாரி ஸாதித்தார்கள். திருத்துழாய்ப் புஷ்ப ஸரங்கள் ப்ரஸாதித்தார்கள். ஸ்தோத்ர பாடங்கள் சொன்னோம். பொங்கல் முதலிய ப்ரஸாதங்க ளெல்லாம் விநியோகித்தார்கள். ஏதோ ஸ்வப்நாவஸ்தையி லுள்ளவன்போல் எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டேன்.

திவ்ய தேசத்து எம்பெருமான்களுடைய போட்டோப் படங்களைச் சேகரித்து வீட்டில் மாட்டிக்கொள்ள வேண்டும் என்கிற மோஹம் எனக்கு உண்டு. இந்த மோஹம் 15-வருஷங்களுக்கு முன் எனக்கு மிகவும் அதிகமாக இருந்தது. காஞ்சீபுரம் தேவாதிராஜன், திருவேங்கட முடையான், ஆராவமுதன், உப்பிலியப்பன், செல்வப்பிள்ளை, ராஜமன்னார் முதலிய எம்பெருமான்களுடைய படங்களைச் சேகரித்தேன். என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்ட ஸ்ரீ ஹரசாப விமோசனப் பெருமாளுடைய படம் ஒன்று ஸம்பாதித்து வைத்துக் கொள்ளவேணும் என்ற ஆர்வம் எனக்கு உண்டாயிற்று.

தாயார் ஸந்நிதிக் கெதிரில் உள்ள நாலுகால் மண்டபத்தில் கோவில் அதிகாரிகளில் ஒருவரான ஒரு ஸ்வாமி உட்கார்ந்திருந்தார். நான் அவரிடம் சென்றேன். அவர் என்னைப் பார்த்தவுடன், நான் கைகளைக் கூப்பி அவருக்கு அஞ்ஜலி செய்தேன். தமது பக்கத்தில் கையைக் காட்டினார். அங்கு நான் உட்கார்ந்தேன். அவர் தமது வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டதும், என்னுடைய யோக க்ஷேமங்களை விசாரிக்கத் தொடங்கினார். 'நான் இன்னான்' என்று சொன்னவுடன் என்னிடம் அவருக்கு விசேஷமான ப்ரீதி யுண்டா யிற்று. சிறிது நேரம் எதெதுவோ பேசிக்கொண்டிருந்தோம். கடைசியில் எனது விருப்பத்தைத் தெரிவித்தேன்.

'இந்தத் திவ்ய தேசத்து எம்பெருமானுடைய போட்டோப் படம் ஒன்று வேண்டும். அகத்தில் மாட்டிவைத்துக் கொண்டு தினமும் ஸேவிக்க ஆசைப்படுகிறேன். அது எங்கே கிடைக்கும் என்று சொல்லவேண்டும்' என்றேன்.

"இந்தப் பெருமாளைப் போட்டோ பிடிக்கவேயில்லையே' என்றார் அவர்.

அதற்குள், 'எல்லாத் திவ்ய தேசத்து எம்பெருமான்களையும் படம் எடுத்து ஸேவார்த்திகளுக்கு விலைக்குக் கொடுக்கிறார்களே, அதைப்போல் இங்கேயும் செய்தால் தேவலை. இப்போது எனக்காக ஒரு போட்டோ எடுக்கச் செய்தால் அதனால் ஏற்படும் செலவை நான் கொடுத்து விடுகிறேன்' என்றேன்.

'செலவுக்காக அல்ல. இந்தப் பெருமாள் அனேக யுகங்களுக்கு முன்னால் ஆவிர்ப்பவித்தவர்; பெரிய ரிஷிகளுக்கும் யோகிகளுக்கும் தேவர்களுக்கும் அருள் செய்தவர்; மற்ற ஸ்தலங்களைக் காட்டில் இங்கு ஸாந்நித்யம் அதிகம். போட்டோ எடுத்தால் ஸாந்நித்யம் குறைந்துவிடும் என்று நினைத்துப் பயப்படுகிறோம்' என்றார்.

அதற்கு நான், 'இதைக் காட்டிலும் பெரிய திவ்ய தேசங்களில் பெருமாளைப் போட்டோ எடுத்து, அந்தப் படத்தை வேண்டுகிறவர்கள் எல்லாருக்கும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்களே; அங்கே யெல்லாம் ஸாந்நித்யம் குறைந்தா போய்விட்டது?' என்றேன். என்னுடைய வாதம் அவருக்குப் பிடிக்கவில்லை என்பதை அவர் முகம் காட்டிற்று. ஆயினும் அம்முகத்தில் கோபக் குறியோ வெறுப்போ தென்படவில்லை.

'இந்தத் திவ்ய தேசத்தை மற்ற இடங்களுக்கு ஒப்பிடுவது ஸரியில்லை. மற்றைத் திவ்ய தேசங்கள் மிகவும் பெரியவையாக இருக்கலாம்; அப்படி இல்லாமலும் இருக்கலாம். திவ்ய தேசங்களின் தாரதம்யத்தைப் பற்றி

விசாரிக்கப் புகுந்தால் சில ஸமயங்களில் அபசாரம் உண்டாகும். என்னுடைய அபிப்ராயம் இவ்வளவுதான். இது ஓர் பழமையான உயர்ந்த திவ்ய தேசம். இந்தப் பெருமாளுக்கு ஸாந்நித்யம் மிகவும் அதிகம். பாக்கி விஷயங்களைப்பற்றி ஏன் வீண் சர்ச்சை?' என்றார். நான் விடவில்லை. 'என்ன ஸ்வாமி! திவ்ய தேசங்களுக்குள்ளே ஸ்ரீரங்கமே முதன்மை பெற்றதாகக் கொண்டாடப்படுகிறது. அதைக் காட்டிலுமா இது சிறந்தது?' என்றேன்.

அவர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு, 'இப்படி இந்தத் திவ்ய தேசம் உயர்ந்ததா அது உயர்ந்ததா என்று சர்ச்சை பண்ணுவது அபசாரம் என்றால் கேட்கமாட்டேன் என்கிறீர். ஆனாலும் 'நஹிநிந்தா ந்யாயம்' என்றும், 'ஸ்துதிபர வாக்யம்' என்றும் சொல்லுகிற ந்யாயங்கள் உண்டு. அதாவது: ஒரு ஸ்தலத்தைக் கொண்டாடும்போது 'அது தான் உயர்ந்தது, மற்றவைகள் எல்லாம் தாழ்ந்தவைகளே' என்று சொல்ல நேரிடுகிறது. இப்படிச் சொல்வது மற்ற ஸ்தலங்களை இளப்பமாகச் சொல்வதற்காக வன்று. கொண்டாடப் படுகின்ற ஒரு ஸ்தலத்தை ப்ரசம்ஸை பண்ணுவதுதான் நோக்கம். இந்த ந்யாயப்படி அபசாரம் நேராது என்று நினைத்துச் சொல்லுகிறேன்' என்று சொல்லி என்னைப் பார்த்தார். நானும் பெரிய பெரிய விஷயங்கள் வரப்போகின்றன என்று அறிந்துஸாவதாநமாகக் கேட்கத் தயாரானேன். பெருமாள் ஸந்நிதியை நோக்கி ஒரு அஞ்ஜலி செய்து விட்டு ஆரம்பித்தார்.

“இந்த எம்பெருமானை ஆழ்வார்களுள் திருமங்கையாழ்வார் ஒருவர்தான் மங்களாசாஸனம் பண்ணியுள்ளார். அதுவும் ஓரே ஒரு பாசுரத்தில்தான். அந்த ஒரு பாசுரமும் முழுவதும் இவர் விஷயமல்ல. 'கண்டியூர், அரங்கம், மெய்யம், கச்சி, பேர், மல்லை' என்று இத்தனை ஸ்தலங்களையும் அந்த ஒரு பாசுரத்தில் சேர்த்துக் கோத்து வைத்தார். அப்படியிருந்தும் அந்த ஒரு பாசுரமே இவர் பெருமைக்கு மிகவும் சிறந்த ப்ரமாணமாகிறது” என்று சொல்லி என்னைப் பார்த்தார். இதனால் இந்தப் பெருமாளுக்கு எப்படி உயர்த்தி வந்தது என்று எனக்குப் புரியவில்லை. அவர் தொடர்ந்தார்.

'வ்யாகரண சாஸ்த்ரம் வாசித்தவர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரிந்த 'அப்யர் ஹிதம் பூர்வம்' என்கிற கட்டளை யொன்று உண்டு. அதாவது: இரண்டோ அல்லது அதற்கு அதிகமாகவோ உள்ள பேர்களையோ ஊர்களையோ விஷயங்களையோ சேர்த்துச் சொல்லும்போது, முக்யமானதை அல்லது உயர்ந்ததை அல்லது பூஜைக்கு உரியதை முதலில் சொல்லவேண்டும் என்பது. 'இராம லக்ஷ்மணர்கள்' என்னும்போது லக்ஷ்மணனைக் காட்டில் இராமன் அதிக பூஜ்யதைக்கு உரியவர் என்று அர்த்தம். 'இதிஹாஸ புராணங்கள்' என்னும்போது, புராணங்களைக் காட்டில் இதிஹாஸங்கள் அதிக பலமுள்ள ப்ரமாணங்கள் என்று அறியவேண்டும். பகவான் தம்முடைய அவதார ப்ரயோஜனத்தைப் 'பரித்ராணாய ஸாதுநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம்' என்னும்போது, அவதாரத்தின் முக்ய ப்ரயோஜனம் முன்னால் சொல்லிய ஸாதுக்கள் ரக்ஷ

ணமே யென்றும், பின்னல் சொல்லிய துஷ்டநிக்ரஹம் ஆநுஷங்கிகமான பலனே என்றும் சொன்னபடி. இந்த விதியை மனத்தில் வைத்துக்கொண்டு ஆழ்வார் பாசுரத்தை உன்னித்துப் பாரும். அரங்கம் மெய்யம் உள்ளிட்ட பின்னல் கூறப்படும் திவ்ய தேசங்களைக்காட்டில், கண்டியூருக்கு ஆழ்வார் ஒரு முக்யத்வம் கொடுத்திருப்பது தெரிகிற தல்லவா? ஆனல் ஆழ்வார் கண்டியூரைப் பற்றிப் பாடியது ஒரு பாசுரந்தான். அதற்கு அடுத்ததாகச் சொல்லும் ஸ்ரீரங்கமோ ஆழ்வார்கள் பதின்மரும் பாடியது. ஸ்ரீரங்கத்தைக் காட்டிலும் கண்டியூர் எப்படி சிறப்புடையதாக இருக்கமுடியும்? என்று ஒரு ஸந்தேஹம் வரலாம்.

இதற்கு ஸ்ரீபராசரபட்டர் வேறிடத்தில் வேறு விஷயத்தைப் பற்றிச் சொல்லிய ஸமாதானமே ஒக்கும். வேதங்கள் அநந்தம். அவை இந்திரனை ஆயிரம் இடங்களில் ஸ்துதிக்கின்றன. வருணனை ஆயிரம் இடங்களில் கொண்டாடு கின்றன. ஆனல் லக்ஷ்மியைப்பற்றி ஒன்றிரண்டு இடங்களில்தான் கொண் டாடுகின்றன. அப்படியிருந்தும், 'அம்மா லக்ஷ்மீ! நீதான் தேவ தேவர்கள் உள்ளிட்ட எல்லா ஜகத்துக்கும் ஈச்வரீ' என்று கொண்டாடி, இந்த்ரன் சந்த்ரன் முதலிய எல்லாரையும் பிராட்டியின் விபவங்களுடைய கோடியில் சேர்த்து விட வில்லையா? இதனல் பிராட்டியின் பெருமை குறைந்தா போய்விட்டது? அதிகமாக வல்லவா ஆகியிருக்கிறது. எனவே, முன்பு நிரூபித்த விதிப்படி, ஆழ் வார்கள் பதின்மராலும் மங்களாசாஸனம் பண்ணப்பட்டு, ஸ்வயம் வ்யக்த ஸ்தலங்களில் முதன்மை பெற்றதாகக் கொண்டாடப்படும் ஸ்ரீரங்கமும் ஏற்றத் தில் கண்டியூருக்கு அடுத்தபடி தான் என்று அறியக்கிடக்கின்றது' என்றார்.

விஷயங்கள் ஸ்வாரஸ்யமாக வந்துகொண்டிருந்தன. நானும் ஆனந்த மாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். இதற்குள் இன்னும் சிலரும் அங்குக் கூடி விட்டார்கள். அந்த ஸ்வாமிக்கும் மிகவும் உத்ஸாஹம் உண்டாகி விட்டது.

ஸ்வாமி மறுபடியும் தொடர்ந்தார். திருமங்கையாழ்வார் ப்ரம்ஹா விஷ்ணு ருத்ரன் என்கிற த்ரிமூர்த்திகளில் விஷ்ணு மூர்த்திதான் பரதேவதை என்று அறுதியிட்டவர். இதை நான் எடுத்துச் சொல்லும்போது ஆழ்வாரோ அல்லது நானே மற்ற தேவதைகளை இழிவாகச் சொன்னதாக நினைக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டே எங்களைப் பார்த்தார்.

அவருடைய விஷயங்களைக் கேட்டு ரஸித்துக்கொண்டிருந்த சிறு கூட் டத்தில், உள்ளூர் சிவன் கோயில் அதிகாரியும் ஒருவர் இருந்தார். அவர், 'அது தான் ஒரு தேவதையைப்பற்றி வர்ணிக்கும்போது மற்றத் தேவதைகளைத் தாழ்த்திச் சொன்னாலும், நஹிநிந்தா ந்யாயப்படி அது நிந்தையாகாது' என்று தாங்களே சொல்லிவிட்டீர்களே. ஆகையால் கவலைப்படவேண்டாம். மேலே சொல்லுங்கள்' என்றார். அந்த ஸ்வாமியும் மேலே தொடர்ந்தார்.

189246

"பாசுரத்தின் முதல் இரண்டு அடிகளில் இரண்டு விசேஷணங்களை அமைத்திருக்கிறார் ஆழ்வார். அவை, 'பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனை திரிதந் துண்ணும், முண்டியான் சாபந்தீர்த்த ஒருவனூர்' என்பதும், 'உலகமேத்தும்' என்பதும். இந்த இரண்டு விசேஷணங்களையும் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், அவை மூன்றாவது அடியில் சொல்லப்படும் திருப்பதிகள் எல்லாவற்றுக்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட விசேஷணம் போல் தோன்றும். ஆனால் கொஞ்சம் ஆழ்ந்து கவனித்தால் இரண்டும் திருக்கண்டியூர் ஒன்றையே குறிப்பதைக் காணலாம்.

முதல் விசேஷணத்தால் ஏற்படுவது பெருமாளுடைய பரத்வம். புவனம் மிகப் பெரியது. அதைப் படைத்தவன் நான்முகனாகிய பிரமன். ஆகையால் அவன் மிகவும் பெருமையுள்ளவனல்லவா? இந்தப் பிரமன் கொடுத்த வரங்களின் ஏகதேசத்தால் ஹிரண்யாஸுரன் ராவணன் முதலியவர்கள் படுத்திய பாடு மிக ப்ரஸித்தம்; என்றால் பிரமனுடைய பலத்தைப் பற்றிக் கேட்கவேண்டுமா? அவ்வளவு பலமுள்ள பிரமனுடைய தலைகளுள் ஒன்றைக் கொய்துவிட்டவர் சிவபெருமான். ஆகையால் பிரமனைக்காட்டிலும் சிவபெருமான் பெரியவராய்த் திகழ்கின்றார். ஆனால் பிரமன் தலையைக் கிள்ளியதா லுண்டாகும் பிரமஹத்தி தோஷத்தைப் போக்கிக்கொள்ள அவரால் முடியவில்லை. அதைப் போக்கிச் சிவபெருமானை நிர்த்தோஷராகப் பண்ணியவர் பகவானே. ஆகையால் பகவான்தானே பரதேவதை என்பதைக் காட்கிறது இந்த முதல் விசேஷணம்.

ஸ்தல புராண ரீதியாகவும், பெரியோர்களிடையே வழங்கும் ஐதிஹ்ய ரீதியாகவும், இந்த வரலாறு திருக்கண்டியூர் ஸ்தலத்துக்குத்தான் ஒக்கும். இந்த வரலாறும் ஐதிஹ்யமும்தான் திருக்கண்டியூரை உலகமேத்தும் திருப்பதியாகச் செய்கின்றன.

த்ரிமூர்த்திகளுக்கும் ப்ரதிஷ்டிதமான தேவாலயங்கள் உள்ள திருப்பதி நாம் அறிந்தவரையில் இந்தத் திருக்கண்டியூர் ஒன்றுதான். இந்தியா முழுவதிலும் ஆராய்ந்து பார்த்தால் இன்னும் ஒன்று அல்லது இரண்டு இடங்களில்தான் பிரமனுக்கு ஆலயம் இருக்கலாம். எனவே பிரமனை வணங்கிவழி படுகிறவர்களுக்கு இது ஒரு முக்யமான ஊர். இந்த ஊர் சைவர்களுக்கும் மிகவும் முக்கியமானதே. த்ரிமூர்த்திகளில் சங்கரன் ஸம்ஹாரமூர்த்தி யானதால், அவர் உள்ள ஊர்கள் எல்லாமே வீரக்ஷேத்ரங்கள்தான். ஆயினும் இந்த ஊரில் அவர் பிரமனுடைய தலையைக் கிள்ளுவதாகிய வீரச் செய்கையைப் புரிந்தார் என்பதால், இதை ஒரு வீரட்டானம் அல்லது 'வீர்யஸ்தானம்' என்று சைவர்கள் கொண்டாடுகிறார்கள். பிரமனுடைய தலையைக் கிள்ளியவர் என்று பொருள்படும்படியான 'பிரமசிர: கண்டீசர்' என்பது இவ்வூர் சிவபெருமானுக்கு நாமதேய மாயிற்று. இதே காரணத்தால் இந்தத் திருப்பதிக்குக் 'கண்டிநம்' என்ற பெயரும் உண்டாயிற்று. இவ்வாறு வீரச் செய்கையைப்

புரிந்து அதனால் ப்ரம்மஹத்தி தோஷத்தை அடைந்தசிவனுடைய சாபத்தைப் போக்கிய பெருமை நன்கு புலனாகும்படி 'அரன்சாபம் தீர்த்த பெருமாள்' அல்லது 'ஹரசாப விமோசனப் பெருமாள்' என்ற திருநாமத்தோடு பெருமாள் இங்கு விளங்குகிறார். இதனால்தான் இந்தத் திருப்பதி 'உலகமேத்துங் கண்டியூர்' என்று கொட்டாடப்படுகிறது என்றார்.

அந்த ஸ்வாமி இவ்வாறு இன்னும் என்னென்னவோ விஷயங்களையெல்லாம் பற்றிக் கூறினார். திருக்கண்டியூர் விஷயமாக அன்று என் அகக்கண் திறந்தது. அன்று அந்த ஸ்வாமியிடம் வாங்கிய ஸ்ரீகோசமே இந்தத் திருக்கண்டியூர் மாஹாத்ம்யம். புஸ்தகத்தை எடுக்கும்போதும் படிக்கும்போதும் உடல் பரவசமாகாமல் என்ன செய்யும்?

[தொடரும்]

பிறவாதார் யார்? [வினா]

[விடை]

1. வஞ்சனைசெய் பூதனையை மலியும் சாட்டை
 மல்லரையோர் மதக்களிற்றை வானோ ரஞ்சும்
கஞ்சனைமுன் கொன்றவனி பாரம் தீர்த்த
 காவலனே! கோவலனாய் நின்ற கோவே!
அஞ்சனமும் காயாவு மனைய மேனி
 யடியவர்க்கு மெய்யனே! அயிந்தை வாழும்
அஞ்சலென அருள்பொழியும் வள்ளலே! நின்
 வடிவழகு மறவாதார் பிறவா தாரே.

ஸ்ரீ தேசிகவள்ளல்.

2. தந்தம் உறியில் அவர்வைத்த தயிர்பால் வெண்ணெய் எட்டாமல்
குந்தி உரலின் மிசையேறி இளங்கோ வியர்முன் கூத்தாடி
நந்தன் மனையி லசோதையிரு நயனங் களிக்க விளையாடும்
மைந்தன் இருதாள் ஒருநாளும் மறவா தாரே பிறவாதார்.

வில்லிபுத்தூ ராழ்வார்.

கொ. ஸுதர்சநாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[ஸ்ரீ. உ.ப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M.A., L.T., வித்வான், திருவையாறு.]

ஸர்வேச்வரனுடைய எல்லையற்ற கருணைக்குப் பாத்ரமாவதற்கு நாம் என் செய்தனமோ? 'ஸம்ஸார-வர்த்தி ஹி ஸம்ஸாரநிவர்த்தகி' என்று பெருக்காறெடுத்து வழியும் அக்கருணைஜரியை விலக்காமையே போதுமென்பர். அத்வேஷ மாத்ரமே போதுமென்பர். இவர்களுடன் ஒத்துப் பாடுபவன்போல் அபாரகருணா பயோநிதியான அவ்வாராவமுதன்

'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம்' 'ஸதாம் ஏதத் அகர்ஹிதம்'

என்று மித்ரபாவனையை வற்புறுத்தி அருள்வதாக அறுதியிட்டான். ஆயினும் அவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளில் ஆழங்காற்பட்டு, அவனுக்கு அஸாதாரணமான சீர்மையடியாகப் பிறந்த அர்ச்சாவதாரத்தில் பித்தராய்த் திரியும் பெரியோர் செயல் யாதோ? அம்மம்ம! இவர்கள் ஊணும் உறக்கமுமின்றி இவ்வுத்தமனைக் காதலிப்பர். என்? சாஸ்த்ரம் செல்வதாலா? இல்லை. 'தொண்டன் யான் அவன் இறைவன்' எனும் தூய நிலைமையால் வந்த நிர்ப்பந்தத்தாலா? இல்லை. அவனைக் காதலியாது இருக்கமுடியாமையால் தான். மனிதன் மூச்சு விடாமல் இருக்க இயலுமோ? அதுபோல் இப்பெரியார்க்குத் திருமால்பால் அன்பு செயல். மேகோதயத்தில் மயில் ஆடுவதேன்? வஸந்தாவிர்ப்பாவத்தில் குயில் கூவுவதேன்? நிறைமதி யெழுந்தக்கால் நீடு திரைக்கடல் பொங்கி எழுவதேன்? அவ்விதமன்றி வேறுவிதம் செய்ய வழியற்றபடியால், ஜலத்திற்கு சைத்யம் போலும், அக்நிக்குத் தாஹம்போலும், காற்றுக்கு ஸததகதிபோலும் ஆழ்வார்களுக்கு ஸர்வேச்வரனின் காதல்.

இக்காதலால் இவர்கள் பட்ட துயரங்கள் கணக்கில. ஊணில்லை; உறக்கமில்லை; பிறர் செய்யும் செயல் யாதுமில்லை. இப்படிப்பட்ட ஆழ்வார்களின் நிலை ஈதாக, பின் வந்த பெரியார் எத்தனைப் பெயர் அவனுக்காக 'த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச' என்று தந்தை தாய் தாரம் கிளை எனுமிவற்றைவிட்டுத் தம் உடலையும் அர்ப்பணம் செய்து ஸர்வேச்வரனுக்குத் தொண்டு செய்துள்ளார்கள். அப்படி உடலைக் கொடுக்கவேண்டுமா? கேளுங்கள்!

பதினான்காம் நூற்றாண்டில் ஏற்பட்ட மகமதியப் படையெழுச்சி தக்ஷிண இந்தியாவை ஓர் ஜஞ்ஜாமாருதம்போல் கலக்கி வாட்டித் திருவரங்கத்தை ஆக்ரமித்தது. கோவில் மதிள்கள் இடிக்கப் பெற்றன. ஸ்ரீ வைஷ்ணவரின் திருமாளிகைகள் தகர்த்தெறியப்பட்டன. பாலர், வ்ருத்தர், அபலையர், படுகாடாகக் கொலை செய்யப்பட்டனர். ஸ்ரீரங்கத்துத் திருவீதிகளிலெல்லாம் ரக்த வெள்ளம் புரண்டோடியது. தாயுடன் இறந்த தநயர் பலர்; பதியுடன்

மாண்ட பாவையர் பலர்; தாயைக் காணாது இறந்த பாலர் பலர்; பாலரைத் தேடிப் படுகொலை யுண்ட பாவையர் பலர்.

அப்பொழுது ஒன்றையுங் கணிசியாது அவர் நமக்குக் காப்பாற்றி வைத்த ஸ்ரீரங்கராஜனை நம் குலதநத்தை—எய்ப்பினில் வைப்பை—இனிமையோர் இறையை—எழில் நலப் பெருக்கினை—என் செய்தோம்? அறவே மறந்தோம். ஆற்றில் ஒரு காலும்சேற்றில் ஒருகாலும் வைக்கும் நிலையால் என் பயன்? 'தீர்த்தனுக்கே தீர்ந்த பின்' என்ற ஆழ்வார் நிலையன்றோ நிலை! எந்த நிலையையும் 'உதாரா: ஸர்வ ஏவைதே' என்று அவன் கொண்டாடி விடுவான். ஸர்வேச்வரனுக்கு நாம் செய்யும் த்யாகம் தான் என்ன? தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும் நோயே பட்டொழிந்தால் போதுமோ?

ஓர் பெண்மணியின் த்யாகத்தைக் கேளுங்கள். பிட்டிதேவன் த்வார ஸமுத்ரத்துக்கு எம்பெருமானார் எழுந்தருளியவுடன், அவன் அவர் சரணாரவிந்தங்களில் பணிந்து வைணவனாகி, விஷ்ணுவர்த்தனன் என்ற பெயர் பெற்றான். அவனதுமகள் யதுகிரி. நாட்டில் அயலரசர் படையெடுப்பினால் அவளது காதலனான நரஹரி அநேக நாள் ராஜ்யத்தின் வட கோடியிலுள்ள பத்ரதுர்க்கம் சித்ராவதி ப்ரசாஸ்தி முதலிய பட்டணங்களில் போர் செய்துகொண்டிருந்தான். நரஹரி த்வார ஸமுத்ரம் திரும்பினால் திருமணம் நடப்பதாக ஏற்பாடாயிருந்தது. ராஜபுத்ரி மிகவும் படித்தவள்; ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்தங்களை நன்கு ஆராய்ந்த புண்யவதி; ஆசார்ய பக்தியும் பகவத் ப்ரேமையும் நிறைந்த மனத்தினள்; நரஹரியிடம் எல்லையற்ற காதல் கொண்டவள்; நிமிஷத்தை யுகமாக நினைத்து அவன் வரவை எதிர்பார்த்திருந்தாள். ஆனால் 'விலையிலா மாணிக்கமான இந்த ஆத்மா, மனுஷ்யனிடம் இவ்வளவு அன்பு வைக்கலாமா?' என்று இடை யிடையே யோசித்தவள். ஆயினும் 'மணமும் வாழ்க்கையும் மாதவன் திருவுள்ளந்தானே' என்று தேறுவாள். பிறகு 'ஆழ்வார்கள் எல்லையற்ற காதலால் இறைவனை நேசித்தனரே' என்று ஏங்குவாள். நரஹரியின் காதல் அவளை ப்ரமிக்கச் செய்தது. நாட்கள் கழிந்தன. விஜய கோஷத்துடன் நரஹரி திரும்பினான். நாடெங்கும் மங்கல கோஷம்; கல்யாண ஆர்ப்பாட்டங்கள் நடந்தன; எங்கும் வாத்யகோஷம்; நரஹரியின் ஆலிங்கநத்தில் யதுகிரி மகிழ்ந்து நின்றாள். 'என் கண்ணே! இன்ப வெள்ளமே!' என்று நரஹரி அவளை முத்தமிடப் போனான். யதுகிரியின் புருவங்கள் நிமிர்ந்து கூடின. அவள் உள்ளம் அந்த ஆநந்த லஹரியில் சுழன்றது. ஆயினும் அவள் நகர்ந்தாள். 'நாளை விடிந்து விவாஹம் நடக்கட்டும்; பின்னரே நான் உன் அடிமை' என்றாள். 'சரி' என்று சொல்லிச் சிரித்து நரஹரி நகர்ந்தான். காலை மூன்று மணிக்கு ஸர்வாபரண பூஷிதையாய் நின்றாள் யதுகிரி. பீதாம்பரமும் பட்டு ரவிக்கையும் தரித்துத் தன் வடிவழகைக் கண்ணாடியில் பார்த்து நின்றாள். அறையில் பல விளக்குகள் ஒளிபெருக்கின. தோழியர் யாவரும் கார்ய வசமாய் அப்புறம்சென்றனர். யதுகிரி தனிமையாய் நின்றாள். கண்ணாடியில்,

'ஐயோ! என்ன அழகு வெள்ளம்! என்ன காந்தி! இத்தனை வடிவழகும் ஒரு மானிடனுக்கா?' என்று யோசித்தாள். திடீரெனத் திடுக்கிட்டாள். கண்ணாடியில் தன் ப்ரதிபிம்ப மில்லை. நீலஜீமூத ஸந்நிபனான செல்வ நாரணன் சங்க சக்ர கதாதாரியாய்த் தன் வலது கையை இரந்து நிற்கும் நிலையில் நீட்டினன். ராஜபுத்ரி வாய் குழறினள். மதுரமான தன் மொழியால் 'நீ யாரோ?' என்றாள்.

பிம்பம் :—நானு யாதவாத்ரி நிவாஸனு. நின்னஹத்ர யாசக மாடலிக்கே பந்தே. [நான் யாதவாத்ரி வாஸி; உன் பால் யாசகத்திற்கு வந்தேன்]

ராஜபுத்ரி :—ஸர்வலோக சரண்யனாத நீனு யாசகுமாடுவ வஸ்து நன்ன ஹத்ர உண்டேனு? [ஸர்வலோக சரண்யனான நீ யாசிக்கும் பொருள் என்னிடம் உண்டா? என்ன?]

பிம்பம் :—நின்ன மதகரவாத ஸௌந்தர்யவே! நின்னன்னே நின்ன ஹத்ர யாசிஸ்தேனே. [உன் மயக்கும் வடிவழகே! உன்னையே உன்பால் யாசிக்கிறேன்]

இந்த மதுரமான வார்த்தைகளைக் கேட்டாள் யதுகிரி. 'ஹா ப்ராண நாதா! அப்படியே ஆகட்டும்' என்றாள். பிம்பம் மறைந்தது. ஸர்வாபரண பூஷிதையான ஸுந்தரி தன்னை ஸ்ரீமந் நாராயணனுக்கு ஒப்புக்கொடுத்தாள். நரஹரியை த்யாகம் செய்தாள். நல்ல உடைகளைக் கழற்றி ஓர் காவி ஆடையை ஸ்வீகரித்தாள். ஸ்ரீ யாதவாத்ரியில் ஸ்வோசிதமான ஸமஸ்த பகவத் கைங்கர்யங்களிலும் ஈடுபட்டாள். 'மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்ற ஆண்டாளை மனத்து வைத்தாள் இம்மாதரசி. அரசியர்க்குரிய போகங்களை மறந்தாள். வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் பொழுதைக் கழித்து வந்தாள். ஸ்ரீ குலசேகன் மகுடாதிபதியாயிருந்தும் எல்லாவற்றையுந் துறந்து, கருமணியைக் கோமளத்தைக் காணவல்லவோ துடித்தார். இவர்கள் செய்த த்யாகத்தை நினைத்தால், நமக்கு ஸர்வ வித உபகாரகனை ஸர்வேச்வரனுக்கு நாம் என் செய்தோம்! என் செய்தோம்!

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ கல்யாணாபிவர்த்திநீ ஸபா, மதுராந்தகம்

௸ ஸபையானது 6—3—48 சனிக்கிழமை மாலை 3-மணிக்கு, இக்கலாசாலை ஸ்தாபகராகிய, ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தானத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகிய சிங்கரின் அவதார திநோத்ஸவத்தைக் கொண்டாடுவதற்கு, வ்யாகரணாத்யாபகர் ஸ்ரீ. உப. P. N. ராகவாசார்ய ஸ்வாமியின் தலைமையில் கூடிற்று. ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுருவப் படத்துக்கு மேள தாளத்துடன் மாலை மர்யாதைகள் செய்யப்பட்டன. அத்யக்ஷர் ‘ஆசார்ய வைபவம்’ என்பது பற்றிப் பேசினார். வேதாந்த வாவதூக ஸ்ரீ. உப. P. நாராயணாசார்ய ஸ்வாமி ‘ஆசார்ய தேவதா ப்ரீதி:’ என்பதுபற்றி உபந்யாஸித்தார். மற்றுமுள்ள அத்யாபக ஸ்வாமிகளும் ஸ்ரீ அழகிய சிங்கரின் ப்ரபாவத்தைப்பற்றிப் பேசினார்கள். பிறகு கலாசாலை அத்யக்ஷ ஸ்வாமி, ஆசார்ய குணங்களையும், ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமநங்களைச் சிரமேற்கொண்டு அவற்றின்படி நடப்பதே நமக்கு ஸ்வரூப மென்றும் பேசி முடித்தார். மங்களத்துடன் ஸபை இனிது முடிந்தது.

௸ ஸபை மீண்டும் 18—3—48 வியாழக்கிழமை மாலை 4-மணிக்கு, மீமாம்ஸாத்யாபகர் ஸ்ரீ. உப. S. கோபாலாசார்ய ஸ்வாமி தலைமையில் கூடிற்று. அப்போது ந்யாய சிரோமணி முதல் வகுப்பில் படிக்கும் மாணவன் V. நரஸிம்ஹன் என்பவனால் ‘தர்மம்’ என்னும் வ்யாஸம் எழுதிப் படிக்கப்பட்டது. அத்யக்ஷ ஸ்வாமி அவ்விஷயத்தை விஶதமாகவும் அழகாகவும் உபந்யஸித்தார். மங்களத்துடன் ஸபை இனிது முடிந்தது.

ஸ்ரீ கல்யாணாபிவர்த்திநீ ஸபையின் ஆறாவது வார்ஷிகோத்ஸவக் கொண்டாட்டம்.

௸ ஸபையினுடைய ஆறாவது வார்ஷிகோத்ஸவக் கொண்டாட்டம், ஸ்ரீ அழகிய சிங்கரின் நியமநத்தை முன்னிட்டு (14—4—48) புதன்கிழமை மாலை 3-மணிக்குக் கலாஶாலை மஹா மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது மதராஸ் யூனிவெர்ஸிடி லெக்சரர் டாக்டர் ஸ்ரீ. வெ. ராகவன் M.A., P. Hd. அன்புடன் ஆத்யக்ஷ்யம் வஹித்தார். சென்னை அரசாங்கக் கல்லூரி ஸம்ஸ்க்ருதாத்யாபகர் ஸாஹித்ய நிபுண சிரோமணி மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. K. L. வ்யாஸராய ஶாஸ்த்ரியார் ‘ஸம்ஸ்க்ருதாத்யயநம்’ என்பதுபற்றி மதுரமான நடையில் ஸம்ஸ்க்ருதத்தில் உபந்யஸித்தார். கார்ய நிர்வாஹம் பற்றிய அறிக்கை வாசிக்கப்பட்ட பின்னர், அத்யக்ஷர் ‘ஸம்ஸ்க்ருதத்தினுடைய தத்கால ஸ்திதி’ என்பதுபற்றி ஸம்ஸ்க்ருதத்தில் அழகாகப் பேசினார். ௸ மஹோத்ஸவத்துக்கு ஸ்ரீ அழகிய சிங்கரால் பரம க்ருபையுடன் அநுக்ரஹிக்கப்பட்ட மந்த்ராக்ஷதை விநியோகிக்கப்பட்டது. அதற்கு பிறகு ௸ மஹோத்ஸவத்துக்கு, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் கார்யதர்சியால் அனுப்பப்பட்ட ஆசிச் செய்தி வாசிக்கப்பட்டது.

அநந்தரம்: கலாசாலை அத்யாபக ஸ்வாமிகளால் அத்யக்ஷருக்கும் உபந்யாஸகர்க்கும் க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் செய்யப்பட்டது. முடிவுரையில் அத்யக்ஷர் ஸம்ஸ்க்ருத பாஷையின் மேன்மையைப் பற்றியும், இந்தப் பாஷாபிவ்ருத்திக் கென்றே இம்மா பெருங்

கலாசாலையை நிர்மாணம் செய்து நிர்வஹித்து வரும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய உபகாரத்துக்கு மனித ஸமுதாயமே என்றும் க்ருதஜ்ஞர்களாக இருக்கவேண்டு மென்றும் கூறினர். பிறகு கார்யதர்சியால் அத்யக்ஷருக்கும் உபந்யாஸகருக்கும் மற்றுமுள்ள யாவர்க்கும் தந்ய வாதம் கூறப்பட்டு மங்களத்துடன் மஹோத்ஸவம் இனிது முடிந்தது.

* * * *

மதுரை ஸ்ரீ வைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய ஸபையின் 14, 15, 16–வது வர்ஷோத்ஸவம்

நிகழும் ஸர்வதாரி௵ சித்திரை௴ 18, 19, 20௳ (1948, ஏப்ரல் 30, மே௴ 1, 2௳) வெள்ளி சனி ஞாயிற்றுக் கிழமைகளில் எம்பெருமான் திருவருளால் இச்சபையின் 14, 15, 16-வது வர்ஷோத்ஸவம், மதுரைத் தெற்குச் சித்திரை வீதியிலிருக்கும் ஆயிர வைசிய காசுக்காரப் பிள்ளைகளுக்குச் சொந்தமான வெள்ளியம்பல மண்டபத்தில் (உள் மண்டபத்தில்) இனிது நடைபெற்றது. அப்பொழுது ஷை ஸபையின் நிரந்தர உதவி அக்ராஸநர் மதுரை வக்கீல் ஸ்ரீ. உப. மாநிஷீமாந்ய R. நரஸிம்ஹ ஐயங்கார் ஸ்வாமி அக்ராஸநம் வஹித்தார். பெருமாள் கோயில் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. கோயில் கந்தாடை வெ. ஸௌரிராஜையங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. S. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி B. A. L. T. முதலிய வித்வான்கள் உபந்யாஸம் செய்தருளினர்.

* * * *

ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கர் வர்ஷாராதந மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிகாராதந மஹோத்ஸவம், நிகழும் ஸர்வதாரி௵ சித்திரை௴ 17௳ அத்யாபக வேத பாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு, 19௳ (1–5–48) சனிக் கிழமை சாத்துமறை பாதுகா தீர்த்தம் முதலியவைகள், ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் திருவோலக்கத்தில், பெங்களூர் துளஸி தோட்டம் ஸ்ரீ கண்ணன் ஸந்நிதியில் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றன. ஷை மஹோத்ஸவத்துக்குப் பெங்களூரைச் சார்ந்த மல்லேச்வரம் விச்வேச்வரபுரம் முதலிய இடங்களி லின்றும், மற்றும் மைஸூர், திருவஹீந்த்ரபுரம், சென்னை முதலிய ஸ்தலங்களினின்றும் அநேக திருநாமங்கள் ஸேவை ஸாதித்து ஸ்ரீ அழகிய சிங்காது ப்ரஸாதத்துக்குப் பாத்ர பூதரானார்கள். சுமார் 500 திருநாமங்களுக்குத் ததீயாராதநம் நடைபெற்றது.

கோ. ஸுதர்சந தாஸன்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஹிதோப தேசத்தைக் கேளாததின் பலம்

மஹாத்மாவான ஸ்ரீ ராகவனால் ராவணன் ஹநநம் செய்யப்பட்டான் என்பதைக் கேட்டவுடன் ராவணனுடைய அந்த:புர ஸ்த்ரீக ளெல்லாரும் மிகவும் துக்கிதர்களாய் வெளியில் ஓடிவந்து பூமியில் விழுந்து புரண்டு கன்றை யிழந்த பசுக்கள் போலக் கதறி அழுதார்கள். அவர்களுடைய பஹுவித ப்ரகாரமான விலாபங்களுள் பின் வருமாறு ஒரு சொல் காணப்படுகின்றது. 'இஷ்டப்ராதாவான விபீஷணன் ஹிதமான உபதேஶத்தைச் செய்தான். அவனை நீ குல தூஷணனென்று அதட்டித் துரத்தி விட்டாய். அவன் சொன்ன வார்த்தையைக் கேட்டிருக்கும் பக்ஷத்தில் மூலஹரமான இந்தப் பெருத்த வ்யஸநம் எங்களுக்கு நேர்ந்திருக்க மாட்டாது; ப்ராதாவான விபீஷணனுடைய சுத்தமான எண்ணமும் நிறைவேறி யிருக்கும்; ஸ்ரீ ராமசந்த்ரனும் நம்முடைய மித்ர கோஷ்டியில் சேர்ந்திருப்பார்; நமது சத்ருக்களும் தமது இஷ்டம் கை கூடினவர்களாகமாட்டார்கள்'

[" 𑌬𑍍𑌰𑍁𑌵𑌾𑌣𑍋𑌽𑌪𑌿 𑌹𑌿𑌤𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌿𑌷𑍍𑌟𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌃 ।
𑌧𑍃𑌷𑍍𑌟𑌂 𑌪𑌰𑍁𑌷𑌿𑌤𑍋 𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌧𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 ॥
𑌯𑌦𑌿 𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌤𑌿𑌤𑌾 𑌤𑍇 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑍀𑌤𑌾 𑌰𑌾𑌮𑌾𑌯 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀 ।
𑌨 𑌨𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍍𑌯𑌸𑌨𑌂 𑌘𑍋𑌰𑌮𑌿𑌦𑌂 𑌮𑍂𑌲𑌹𑌰𑌂 𑌮𑌹𑌤𑍍 ॥
𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑌾𑌮𑍋 𑌭𑌵𑍇𑌦𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌰𑌾𑌮𑍋 𑌮𑌿𑌤𑍍𑌰𑌕𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌵𑌯𑌂 𑌚𑌾𑌵𑌿𑌧𑌵𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌸𑌕𑌾𑌮𑌾 𑌨 𑌚 𑌶𑌤𑍍𑌰𑌵𑌃 ॥ "]

இம்மாதிரியான விலாபங்கள், ஹைதராபாத் ராஜ்யத்தைச் சார்ந்துள்ள ப்ரதேஶங்களில் வஸிக்கும் குடும்பங்களின் ஸ்த்ரீகளினுடைய முகங்களிலிருந்து வெள்ளம் வெள்ளமாக ப்ரவஹிக்கின்றன. 'மஹாத்மா காந்திஜி முதலான நமது பெரியோர்கள், தமக்கு ஹிதத்தைப் போதித்த மிதவாதிகளின் வார்த்தையை நிராகரியாமல், அவர்கள் புத்தியை அநுஸரித்து ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்டுவந்த ராஜ்யத்தைச் சிற்சில பரிஷ்காரங்களுடன் அங்கீகரித்து

வந்திருக்கும் பக்ஷத்தில், நமக்கு இந்த மூலஹாரமான ஆபத் வந்திருக்கமாட்டாதே. மோஹத்தால் ஆங்கிலேயர்களை ஶத்ருக்களென்று நினைத்து அவர்களை அடியோடு துரத்திவிடவே, நம்முடன் கூடவே அவஸர ப்ரதீக்ஷகர்களாக நின்றுகொண்டிருந்த நமது பங்காளி ப்ராயர்களான சில ஶத்ருக்களுக்குத் துராக்மம் செய்ய இடம் கொடுத்தாகி விட்டதே. ஆங்கிலேய ராஜ்ய நிர்வாஹ காலத்தில்; வேறு சில கெடுதல்கள் இருந்தபோதிலும், நம்முடைய ஶரீரத்திற்கும் சொத்துக்கும் மத அநுஷ்டாநத்திற்கும் எவ்விதமான தீங்கும் விளையாமல் இருந்ததே. துஷ்டர்கள் அடங்கி யிருந்தார்கள்; ஸாதுக்கள் சரியானபடி ஸம்ரக்ஷிக்கப்பட்டு வந்தார்கள். இப்பொழுது தேசம் அராஜகமாகிவிட்டதே. வீடு வாசல்கள் துஷ்டர்களால் அபஹரிக்கப்பட்டுப் போகின்றன. ஸ்த்ரீகள் கூட்டம் கூட்டமாக ஆக்ரமிக்கப்பட்டு நசிக்கப்படுகிறார்கள். க்ராமம் க்ராமமாக ஸ்தலங்கள் சாம்பலாக்கப் படுகின்றன என்று புலம்புகிறார்கள். 'பிள்ளைகளை இழந்தோம்; பெண்களை இழந்தோம்; நம்மையும் இழந்தோம்' என்றித் தகைய ஆர்த்த த்வநி நாலு பக்கங்களிலிருந்தும் காதில் விழுகின்றது. நமது ராஜாங்கத்தார் 'அஹிம்ஸை' என்னும் ஒரு ந்யாயத்தை அவலம்பித்துத் துஷ்டர்களை நிக்ரஹியாமல் இருக்கவே, தேசத்தில் அராஜகத்தன்மை பரவிவிட்டது. இது எவ்விடத்தில் போய் நிற்கும் என்பது தெரியவில்லை. கலியுகம் முடிந்துவிடுகிறதோ? நமது புராணங்களில் கலியுக லக்ஷணத்தைப் பற்றிப் பேசுகையில், ஜநங்களெல்லாரும் லோப மோஹங்களுக்குப் பரவஶமாகி பரஸ்பரம் வதம் செய்து கொள்வார்களென்றும், கையே கையைத் திருடுமென்றும், ஜகத் முழுவதும் கலங்கி மர்யாதை கெட்டதாகிவிடுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

"𑌲𑍋𑌭𑌮𑍋𑌹𑌵𑌶𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌕𑌾𑌲𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ।
𑌪𑍈𑌶𑍁𑌨𑍍𑌯𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑌧𑍈𑌷𑌿𑌣𑌃 ॥
𑌹𑌸𑍍𑌤𑌾𑌹𑌸𑍍𑌤𑌂 𑌪𑌰𑌿𑌮𑍁𑌷𑍍𑌣𑌨𑍍𑌤𑌿 𑌕𑌾𑌲𑍇 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 ॥
𑌏𑌵𑌂 𑌪𑌰𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌾 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।"

அக்காலம் இப்பொழுது வந்துவிட்டதோவென்று நாம் பயப்படுகிறோம்.

* * * *

ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமநத்தின் பேரில், புத்தங்கோட்டகம் மஹாவித்வான் ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வேதாந்த

உபந்யாஸங்கள்

விஷயமாகவும் ஸாமாந்ய தர்மாநுஷ்டாந விஷயமாகவும் பல விடங்களில் உபந்யாஸங்களைச் செய்துவருவதாக நமக்குக் கர்ண கர்ணிகமாகத் தெரிய வருகிறது. ஸ்ரீரங்கத்தில் பல உபந்யாஸங்கள் நடைபெற்றனவாம். இப்பொழுது மதுரையில் அநேக உபந்யாஸங்கள் நடைபெறுகின்றனவாம். ஸ்வாமியின் திருமேனி ஸௌகர்யமாக இருந்தால், இன்னும் சில ஸ்தலாந்தரங்களிலும் இம்மாதிரியான உபந்யாஸங்கள் நடைபெறலாம். இம்மாதிரியான உபந்யாஸங்கள் ஜகத்திற்குப் பெரிய ஆநுகூல்யத்தைச் செய்யுமென்பதே நமது நம்பிக்கை. அநேக இடங்களில் அநேக

ஆஸ்திகர்கள் தென்படுகிறார்கள். உபதேசிப்பவர்கள் இல்லாததால் அவர்கள் தங்கள் தர்மானுஷ்டானத்திலிருந்து விலகி நிற்கும்படி ஸம்பவிக்கின்றது. இம்மாதிரியான உபந்யாஸ ச்ரவணமாத்ரத்தால் அவர்கள் பூர்ண தார்மிகர்களாகவோ பூர்ண தத்வ வித்துக்களாகவோ மாறிவிடுவார்களென்று சொல்ல முடியாது. ச்ரத்தை இருக்கிறவர்களுக்கு இம்மாதிரியான உபந்யாஸ ச்ரவணம் காலக்ரமேண அதைப் பலவத்தாகச் செய்யலாம்.

ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி ஒரு பெரிய வித்வான்; நல்ல வாக்மீ; தர்ம சாஸ்த்ரங்களிலும் வேதாந்தார்த்தங்களிலும் தல ஸ்பர்சமான ஜ்ஞானம் பெற்றவர். இவைகளுடன் கூட மஹத்தான சைஷ்ட்யம் அவரிடம் உண்டு. ஸம்ஸாரத்தில் உழன்று கொண்டிருக்கும் ஸம்ஸாரி சேதநர்களை எப்படியாவது உஜ்ஜீவிப்பிக்கவேண்டுமென்னும் ஆஸ்தை அவரிடம் பூர்ணமாக இருப்பதை நாம் அறிவோம். இவ்வாறு ஸகல குணங்களும் வாய்ந்துள்ள ஒரு பகவத் ப்ரியர் தமது கஷ்ட நிஷ்டூரங்களை அநாதரித்து ஜகத் ஹிதமான இம்மாதிரி மஹோபகாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார் என்பதைக் கேட்டு நாம் மஹத்தான ஆநந்தத்தை அடைகிறோம். அவருடைய உபதேசம் ஸகல அம்சங்களிலும் ஸர்வ ச்லாக்யமாக இருந்தாலும், அது உடனே இஷ்ட பலத்தை ஸாதித்துக் கொடுத்துவிடுமென்று எதிர்பார்ப்பது, கால ஸ்திதியை அறியாதவர்களுடைய கார்யமாகும். வாரி இறைத்த பீஜங்கள் அநாவ்ருஷ்டியால் உக்த ப்ராயமாயுள்ள ஸ்தலங்களில் விழுந்தாலும், எங்கேனும் இரண்டொரு இடங்களிலாவது அது காலக்ரமேண லப்த ஸத்தாக்களாய் ஓங்கி வளரலாமன்றோ? ஸ்ரீ கீதாசார்யனும் 'கச்சித் யததி ஸித்தயே' என்றும், 'கச்சின்மாம் வேத்தி தத்வத:' என்றும், ஸ்வல்ப பலத்தால் த்ருப்தனானன்றோ? ஸ்வாமியினுடைய திருமேனி அவ்வளவாக தார்ட்யம் பெற்றதன்று; ஒருகால் உத்யோகத்தின் கடுமையால் அந்தத் திருமேனி தளர்ச்சி அடையலாம். அப்படி எவ்வித தளர்ச்சியையும் வரவொட்டாமல் ஸ்வாமிக்குத் திருமேனியில் யாவதபேக்ஷிதமான தார்ட்யத்தைக் கொடுத்து அந்த ஸ்வாமியின் உபதேச பலமாக மஹா ஜநங்கள் ஆத்மோஜ்ஜீவநத்தை அடையும்படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநுக்ரஹிக்க வேணும் என்பது தான் நமது ஹார்த்தமான ப்ரார்த்தனை.

* * * *

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் ரகுவீரகத்யம்.

ஸ்ரீ தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்ட க்ரந்தங்களுள் 'ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்' என்பது ஒன்று. அதற்கு வ்யாக்யான ரூபமாக ஸ்ரீ. உ.வே. எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி ஓர் உரை எழுதிவருகிறார். அது நமது 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' வாயிலாக வெளி வருகிறது.

ஸங்கல்ப ஸூர்யோதயம் என்பது மிகுந்த கம்பீரமான க்ரந்தம். அது கேவலம் நாடகமன்று. நாடகங்களுக்கு ரஸ விசேஷங்களைக் கொடுக்கும் ப்ரக்ரியைகள் பூர்ணமாய் அமைந்திருப்பதுடன், ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸம்பத்தங்களான ரஹஸ்யார்த்தங்களும் அதில் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், அதன் பாவத்தை விவரணம் செய்யப் புகுகிறவர்கள்

ஸாஹித்ய ரஸாநுபவ ஶாலிகளாக இருப்பதுடன், வேதாந்த நிஷ்ணாதர்களாக வும் இருத்தல் வேண்டும். ஸ்ரீ. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியினிடம் இந்த இரண்டு ஏற்றங்களும் ஸமக்ரமாக இருக்கின்றன வென்பதை அந்த ஸ்வாமி யின் ஸூக்திகளைப் படிப்பவர்கள் எல்லாரும் அறிவார்கள். விஷயங்களின் ரஸத்தை அறியும் பஹுவித்துக்கள் பலருண்டு; அப்படி ரஸத்தை அறிந்து அதை அந்தரங்கமாக அநுபவிக்கும் சித்தவான்கள் மிருக்யர்களே. அந்த அபூர்வரான வ்யக்திகளுள் இந்த மஹான் ஒருவர். இந்த ஸ்வாமி செய்யும் பாவ விவரணங்களை நாம் அப்பொழுதைக் கப்பொழுது அநுபவித்து வருகி ரோம். ஆனால் ரஸவத்தான வஸ்துவை ஏகாகியாக அநுபவித்தால் அதன் ரஸம் அவ்வளவாக ரஸிக்கமாட்டாதாகையால், ஸ்வாமியின் ரஸோக்திகளை அநு வதித்து நமது ஸுஹ்ருத்துக்களுக்கு அவைகளைப் புத்தி கோசரமாகச் செய்ய வேண்டு மென்னும் எண்ணம் பல ஸமயங்களில் நமக்கு ஜநித்ததுண்டு. ஆனால், அப்படிச் செய்வதால் அபசாரம் ஏதாவது ஸம்பவிக்குமோ வென்று பயந்து இதுவரை அதில் ப்ரவர்த்தியாம லிருந்தோம். இப்பொழுது இந்த வ்யாக்யாநத் தில் நேர்ந்திருக்கும் கட்டம் மிகவும் அழகானது. இது ஸ்ரீ சக்ரவர்த்தித் திரு மகனுடைய திவ்ய குணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் பற்றிப் பேசும் கட்டம். இவைகளை ஸ்ரீ தேசிகன் தமது ஸ்ரீ ரகுவீர கத்யத்தில் ஒரு விதமாக அநுபவித்திருக்கிறார். ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் அதையே ப்ரகாராந்தர மாக அநுபவிக்கிறார். ஸங்கல்ப ஸூர்யோதயத்திலிருக்கும் வாக்ய ஶைலியைப் பார்க்கும்போது, ஏதோ ஒரு ஆவேஶம் வந்து அவைகளை அளவற்ற ஆநந்தத் துடன் அவர் அநுபவித்து அநுக்ரஹித்ததாகத் தெரிகிறது. இதர அவதாரங் களைப் பற்றி இந்த அங்கத்தில் ப்ரஸ்தாவம் நேர்ந்திருக்கிறது. அவ்விடங்களில் ஓரோர் ச்லோகத்தாலேயே அந்தந்த அநுபவங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கின் றன. இவ்விடத்திலோ வென்றால், அவரை மீறி அந்த வர்ணநம் பெரியதொரு கத்ய ரூபமாக வெளிவந்திருக்கிறது. ஸ்ரீ வால்மீகி பகவானால் ஸ்ரீ ராமாயணத் தில் கூடமாக ஸூசிப்பிக்கப்பட்டுள்ள சில பாவ விசேஷங்கள் இதில் ப்ரகாஶ மாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவைகளை, நமது ரஸிகோத்தமரான ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி வெகு அழகாக ப்ரகாஶிப்பித்திருக்கிறார். அதைக் கொஞ்சம் நாம் அநுவதிக்கத் துணிகின்றோம்.

'ஜய ஜய மஹாவீர' என்று உபக்ரமிக்கிறது ரகுவீரகத்யம். அதில் எல்லாப் பதங்களும் ஸ்ரீ ரகுவீரனுக்கு ஸம்போதநங்களாக இருக்கின்றன. இவ்விடத்தில் அந்த ஸம்போதநத்தை மாற்றிப் பதங்களை யெல்லாம் 'ஸுநெந ஸிஹ' என்று மூன்றாம் வேற்றுமையாக ப்ரயோகம் செய்தருளியிருக்கிறார். இவ் வாறு ஒரு மாறுதலைச் செய்வதற்கு விஶேஷித்த ஒரு காரணம் இருத்தல் வேண் டும். அந்தக் காரணத்தை ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி வெகு தெளிவாக ப்ரகாஶிப்பித்திருக்கிறார். அப்படி மாற்றினது, ஸ்ரீராமாயணத்திலும் ஸ்ரீ ரகு வீரகத்யத்திலும் மறைபொருளாக ஸூசிப்பிக்கப்பட்டுள்ள ஒரு ரஹஸ் யத்தை ப்ரகடமாகச் சொல்லவேண்டு மென்பதற்கே. ஸ்ரீ ராமாயணத்தில் ராவ ணனைப்போன்ற துஷ்டர்களை ஸம்ஹரிப்பதே ஸ்ரீ ராமசந்த்ரனுடைய அவதாரத்

தின் ப்ரயோஜநமென்று ஆபாததஃ தோன்றும். உள் புகுந்து பார்க்குங் காலத்தில் அந்த ப்ரயோஜநம் அது மாத்ரமன்று. 'லோகத்ரய கண்டகனுன ராவணனை ஸம்ஹரித்து மூன்றுலகிலுமுள்ள ஸாதுக்களுக்கு அபயமளித்து ஜகத் முழுவதையும் ஸநாதநமாகச் செய்யவேண்டுமென்பதே பரம ப்ரயோஜநமென்று தெரியவரும். இதை ஸ்ரீ ராமாயணத்தில்

"த்ரைலோக்யஸ்ய விநாஶாய யேந ஸ்ராஷ்டுமாயவத்தரம்"

என்னும் சக்ரவர்த்தியின் வாக்யத்தாலும்,

"த்ரயாணாம் லோகாநாம் ஹிதகாமார்த்தம் ஸ்வயம் ப்ரபு: ।"

என்னும் சதுர்முகனுடைய வாக்யத்தாலும், வால்மீகி ஸூசிப்பித்திருக்கிறார். ஸ்ரீ ரகுவீரகத்யத்திலும்,

"ஸததஸநாதிதஸகலஜநஸமுதாரா"

என்று இது ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுவே முக்ய ப்ரயோஜநமென்பதை வெளிப்படையாகக் காட்டுகிறது ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய கத்யம்.

"அநேந ஸகலஜநஹித ராமேண ராமேண விஶ்வமேதத்ஸநாதீக்ருதம்"

[இப்படிப்பட்ட ராமனுல் இந்த ஜகத் முழுவதும் ஸநாதமாகச் செய்யப்பட்டது] என்று ஸம்போதநத்தை மூன்றும் வேற்றுமையாக மாற்றி ஒரே வாக்யமாக ரசனை செய்யப்பட்டிருக்கிறது. மற்றைச் சேஷ்டிதங்களெல்லாம் இதற்கு அங்க பூதங்களென்பதை இந்த ஶைலி வ்யக்தமாகக் காட்டுகின்றதன்றோ? ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி இதை வெளிப்படுத்தியிருப்பது அவருடைய புத்தி ஸௌக்ஷ்ம்யத்தைக் காட்டுகிறது. இந்தக் கத்யத்தில்,

'கோஸலஸுதாகுமாரபாவகஞ்சுகிதகாரணாகாரேண', 'கௌஶிகஹோமவாயிதகௌஶிகாயுதேந', 'ரணாத்வரதுர்யபவ்யதிவ்யாஸ்த்ரப்ருந்தவந்திநா'

இந்த மூன்று பதங்களும் முதல் முதலில் விவரிக்கப்படுகின்றன. ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், கௌஸல்யையின் குமாரனுக அவதரித்துத் தனது உண்மையான ஆகாரத்தை மறைத்துக் கொண்டதும், சிறு வயதிலேயே விச்வாமித்ரருடைய யாகத்தைக் காப்பாற்றினதும், விச்வாமித்ரரால் கொடுக்கப்பட்ட அஸ்த்ரங்களைப் பெற்றுக் கொண்டதும், இவையெல்லாம் அவதாரத்தின் முக்ய ப்ரயோஜநமாகிற மூவுலகின் ஸம்ரக்ஷணத்திற்காகவே என்பது வ்யக்தமாகின்றது. இந்தப் பதங்களில் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமியால் எடுத்துக் காட்டப்படும் விசேஷார்த்தங்களாவன:—

1. 'தஶரதகுமாரபாவ......' என்று சொல்லாமல், 'கோஸலஸுதாகுமாரபாவ' என்று அநுக்ரஹித்திருப்பது, ஸ்ரீ ராம சந்த்ரனை அநுபவிப்

பதில் கௌஸல்யையின் புத்ரனாக அநுஸந்தாநம் செய்வது போக்யதாதிஶயத்துடன் கூடிய தென்பதை வெளிப்படுத்துகின்றது. ஸ்ரீ ராம சந்த்ரனுடைய அழகில் ஈடுபட்ட விச்வாமித்ர மஹர்ஷி அவனை ‘கௌஸல்யாஸுப்ரஜா ராம’ என்று அழைத்தாரே யொழிய ‘தஶரத ஸுப்ரஜா ராம’ என்று அழைக்கவில்லை. லோகாநுபவத்திலும் ரஸிகர்கள் இதைக் காண்பார்கள். ஸ்ரீரகுவீர கத்யத்திலும் இந்தப் பதம் இப்படியே காணப்படுகிறது.

2. ‘கோபாயிதகௌஶிகாத்வர’ என்பதில் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி புதிய விநோதகரமான ஒரு பொருளைக் காண்கிறார். ‘கோபாயித’ என்பதற்கு, ‘ரக்ஷிக்கப்பட்ட’ என்பதுடன், ‘கோபனைப்போல் நடந்த’ என்று வேறொரு பொருளும், ‘கௌஶிக’ என்பதற்கு ‘விச்வாமித்ரர்’ என்பதுடன், ‘இந்த்ரன்’ என்று வேறொரு பொருளும் இருப்பதை அவலம்பித்து, இந்தப் பதத்தில் ஸ்வாமி தேஶிகன் ராம சந்த்ரனுடைய பாலகேளியின் ப்ரஸ்தாவம், கண்ணனுடைய பாலகேளியை நினைவு மூட்டுகின்றது என்பதை த்யோதிப்பிக்கிறார். இதை ஒரு சாடுவான விவரணமாகவே நாம் க்ரஹிக்கிறோம். சாடூக்திகளிலும் ரஸம் உண்டன்றோ?

3. ‘ரணாத்வரதுர்யபவ்யதிவ்யாஸ்த்ரப்ருந்தவந்தித’ என்று ரகுவீர கத்யத்தில் காணப்படும் பதம், ‘ரணாத்வரதுர்யபவ்யதிவ்யாஸ்த்ரஶாலிநா’ என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் மாற்றப்பட்டிருக்கின்றது. இந்த மாறுதலும் அவதாரத்தின் முக்ய ப்ரயோஜநமாகிற மூவுலகின் ஸம்ரக்ஷணத்தை வெளிப்படுத்துவதற்காகவே யென்பது ஸ்ரீ கோபாலாசார்யருடைய விவரணம். அது எப்படி யென்றால்: ரகுவீர கத்ய வாக்யத்தின் பொருள், ‘விச்வாமித்ரரால் கொடுக்கப்பட்ட திவ்யாஸ்த்ரங்கள் ஸ்ரீ ராமசந்த்ரனை நமஸ்கரித்தன’ என்னும் பொருளை மாத்ரம் விளக்குகிறது. ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் காணப்படும் பதம், ‘விச்வாமித்ரரால் கொடுக்கப்பட்ட அஸ்த்ரங்கள் ராமனை அடைந்த பிறகு நிறம் பெற்றன’ [திவ்யாஸ்த்ராணி ஶாலீநி யேந ஸ: = திவ்யாஸ்த்ரஶாலீ] என்னும் பொருளை விளக்குகின்றது. ‘அஸ்த்ரங்களுக்கு ஒரு ஏற்றத்தைக் கொடுக்கத் தகுந்தவன் ஸ்ரீ ராம சந்த்ரன்’ என்று சொல்வதால் ‘அவன் மிகுந்த பராக்ரமஶாலி; இந்த அஸ்த்ரங்களின் ஸஹாய மின்றிக்கே மூவுலகையும் காப்பாற்ற அவன் ஶக்தன்’ என்பது வெளியாகின்றதன்றோ? இந்த விவரணம் மிகவும் ச்லாகிக்கத் தகுந்ததே. இம்மாதிரி விவரணங்கள் அநேகம் ரஸிகர்களால் அநுபவிக்கத் தக்கவைகளாக இதில் காணப்படுகின்றன.

விஜ்ஞா :—அதற்கென்ன தடை? அவ்விதமே சொல்லுகிறேன். குறி சொல்வது இருக்கட்டும். வெகு காலத்துக்கு முன், எந்தெந்தத் தேசத்தில் நடந்த வ்ருத்தாந்தங்களையும் கண்ணெதிரில் காட்டும் திவ்ய த்ருஷ்டியின் மஹிமையினால் அஹோபிலேஶனாகிய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய வ்ருத்தாந்தங்கள் அனைத்தையும் ப்ரத்யக்ஷமாகப் பார்த்துச் சொல்லுகிறேன்.

[ஒரு முஹூர்த்தம் கண்களை மூடி த்யானத்தில் ஆழ்கிறாள்.]

பிறகு: ‘இதோ என் கண்முன் திவ்ய ஸரோவரம் ஓடுகிறது. அதன் ஸமீபத்தில் அஹோபில ராஜதானி விளங்குகிறது. இதோ வேத மயமாகிய திருமலையைக் காண்கிறேன். அதன் ஸமீபத்தில் ‘பவநாஶிநீ’ புஷ்கரிணி விளங்குகிறது. மற்றொரு பக்கம் ஆஸ்தாந மண்டபம் தென்படுகிறது. அம்மண்டபத்தைச் சுற்றிலும் பகவானை ஸேவிப்பதின் பொருட்டுத் திக்பாலர்கள் சூழ்ந்து நிற்கின்றனர்.’

சதுரிகா :—[மிகவும் ஆச்சர்யத்துடன்] பகவதியின் திவ்ய த்ருஷ்டியின் ப்ரபாவம் அத்புதத்திலும் அத்புதம்! வேட்டுவ ராஜதானியாகிய இப்பட்டணம் எங்கே? அஹோபிலேஶன் வஸிக்கும் நகரம் எங்கே? அவ்விதம் வெகு தூரத்தில் இருக்கும் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனது வ்ருத்தாந்தத்தை ஸமீபத்தில் கண்முன் நடப்பது போல் அல்லவோ சொல்லுகிறாள்? இது எவரால் ஸாத்யம்! பகவதியின் தவப் பெருமையும் மஹிமையும் அபாரம்.

ப்ரமரிகா :—தாயே! பிறகு என்ன ஸமாசாரம்? முழுவதும் கூறுங்கள். இன்னும் என்ன பார்க்கிறீர்கள்?

விஜ்ஞா :—அம்மண்டபத்தின் மத்தியில் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் யாரோ ஒரு பெண்ணரசியின் மேல் மோஹமுற்று வருந்துவதுபோல் காணப்படுகிறார். த்ரிகாலங்களிலும் ஸகல தேவர்களும் எம்பெருமானை ஸேவிக்கும் பொருட்டு ஆஸ்தாந மண்டபத்தில் கைக்கட்டிக் காத்து நிற்கின்றனர். அவர்கள் இருக்கட்டும். ஐந்தாறு தினங்களாய் வாயுவும் சந்த்ரனும் முதல் கட்டிலேயே தடைப்பட்டு நிற்கின்றனர்.

வாஸந்திகா :—[மிக்க சினமுற்றவள்போல்] தென்றலும் நிலவும் எப்போதும் விரஹிகளை வாட்டும்; ஜனங்களைக் கஷ்டப்படுத்தும். இக்காதலர்களுக்குத் திரஸ்காரமானது தக்க தண்டனைதான். ஆனால் இதுவும் போதாது இவர்களுக்கு ப்ராயச்சித்தம். பகவான் தனது படுக்கையாகிற திருவநந்தாழ்வானை, அம்ருத கிரணங்களுடைய சந்த்ரனையும் மந்த மாருதத்தையும் ஒரு துளியும் மிஞ்சாமல் பருகுமாறு ஏன் கட்டளையிடவில்லையோ? பாம்பிற்குக் காற்றல்லவா உணவு? அவன் வாதாஶநனன்றோ?

சதுரிகா :—தோழீ! வாஸந்திகா! ஏன் அவர்கள்மேல் குற்றம் சாட்டுகிறாய்? அவர்கள் உலகிற்குக் கணக்கற்ற நன்மைகளையன்றோ புரிகின்றனர்! இந்நிலையில் உனக்குக் கஷ்டம்; பிறகு தானே ஸுகம் வருகிறது.

வாஸந்திகா :--பகவதி! அவள் புலம்பல் இருக்கட்டும். அதற்கேன் செவி சாய்க்கவேண்டும்? மேலே நடந்த வ்ருத்தாந்தங்களைச் சற்றுக் கூறுங்கள்.

விஜ்ஞா :--[மிக்க வணக்கத்துடன் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு] ஆஹா! என்னுடைய பாக்யம் அளவற்றது. இதோ எதிரில் எத்தகைய லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்ய ஸேவை! வீற்றிருப்பது திவ்ய ஸிம்ஹாஸநம். திருமார்பில் நறுமணங் கமழும் சீதக் களபச் சந்தனக் குழம்பு. மூவுலகிற்கும் பரமாசார்யனும் ஸர்வலோக ஶரண்யனுமான அவ்வெம்பெருமானைச் சுற்றிலும் வெண்சாமரம் வீசி உபசரிக்கும் இந்த்ராதி தேவர்கள். இந்த ஸௌந்தர்ய ஸேவை எவர்க்குக் கிட்டும்?

சதுரிகா :--நமது ப்ரிய ஸகியின் அத்ருஷ்டமே அத்ருஷ்டம். லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இவளைப் பாணிக்ரஹணம் செய்துகொள்வது திண்ணம். ஆகவே அவச்யம் தேவாஸுரர்கள் அனைவரும் இவளை வணங்கி வழிபடுவர். எம் பெருமான் அடையும் வைபவம் அனைத்தும் இவளும் அடையப்போகிறாள்.

வாஸந்திகா :--போதும் போதும் உன் பரிஹாஸப் பேச்சு. ரொம்ப ஸாமர்த்யக்காரி நீ. எம்பெருமான் எங்கே? வேடுவப் பெண்ணாகிய நான் எங்கே? மனம் போன போக்கின்படி கூறுவதே உன் ஸ்வபாவம்.

விஜ்ஞா :--ஸகல ஜநங்களையும் ஸம்ஸாரக் கடலினின்றும் தாண்டவைக்கும் பகவான்கூட விரஹ வேதனைக்குத் தப்பினபாடில்லையே. இவ்விரஹ வேதனையால் திவ்ய திருமேனி துரும்பாய் இளைத்துவிட்டதே! பேச்சோ ஒன்றுக் கொன்று ஸம்பந்த மில்லாத பிதற்றல். முக்கால் பாகமும் மூடியுள்ளன கமலக் கண்கள். திருமுகமும் வாடி வதங்கி விட்டது. வாஹநமும் நழுவிச் சோர்ந்து விட்டது. ஹ்ருதயமே ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் ஊசலாடுகிறது. அடிக்கடி பெருமூச்சு வருகிறது. அதரங்களோ ரஸமின்றி உலர்ந்துள்ளது. பகவானுடைய தைர்யமானது எங்கோ தூரத்தில் ஓடி ஒளிந்துவிட்டது. ஆஹா! இதென்ன விந்தை! மந்மத பாணத்தின் மஹிமையே மஹிமை! இப்போது அவன் காலம் எம்பெருமானையும் ஆட்டிவைக்கிறது.

வாஸந்திகா :--இத்தகைய ஹீந ஸ்திதியிலிருக்கும் தேவாதி தேவனை அநாதரித்து எந்தப் புண்யவதி தன்னையும் வஞ்சித்துக் கொள்கிறாள்?

ப்ரமரிகா :--வேறொரு பெண் எங்கிருந்து வந்தாள்! தாங்களே தான் அனைத்துக்கும் காரணம். தன் அழகும் பெருமையும் தனக்கே தெரிவதில்லை.

வாஸந்திகா :--போதுமே! இதுவா பரிஹாஸத்துக்கு ஸமயம்?

ப்ரமரிகா :--ஸகீ! இவ்வவநம்பிக்கை உன்னை விட்டு எப்போது நீங்கும்? சற்றுப் பொறு. பகவதியையே மறுபடியும் கேட்போம்.

விஜ்ஞா :--எனக்கு இது தான் தோன்றுகிறது. வந தேவதையை ஆராதித்துக்கொண்டிருந்த உன்னைப் பார்த்தார் பகவான். அது முதற்கொண்டு உன்மேல் தீரா மோஹம் கொண்டார். இப்போது இத்தகைய தீந தசையை அடைந்து வருந்துகிறார்.

வாஸந்திகா :--[மனத்துக்குள்] எனக்கேது அத்தகைய தவமஹிமை? மேருவுக்கும் துரும்புக்கும் உள்ள ஏற்றத் தாழ்வல்லவோ எனக்கும் அவருக்கும்!

ஸகிகள் :—[மறுபடியும் ஏதோ ஞாபகம் வந்தவர்களைப்போல்] தோழீ! வாஸந்திகா! அன்றொரு நாள் நாம் வந தேவதையின் பூஜையை முடித்துத் திரும்புமளவில் மிகவும் கோலாஹல சப்தம் ஒன்றைக் கேட்டோமல்லவா?

வாஸந்திகா :—[நினைவு வந்தவளாய்] ஆம்; தோழிகளே! நீங்கள் கூறுவது உண்மை. அப்போது என்ன நடந்தது? யாரோ ஒரு அரச குமாரன் வேட்டையாட வந்ததாக எண்ணி நாம் விரைந்து வந்தோம். அதற்கென்ன இப்போது?

தோழிகள் :—அவ்வரசன் யார் தெரியுமோ? அஹோபிலேசனாகிய லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் தான். வேட்டையாடும் வ்யாஜம் கொண்டு உன்னை வேட்டையாட வந்தார். அவர் தமது கமலக் கண்களால் ஆலிங்கநம் செய்துகொள்பவர்போல் கடாக்ஷித்தார்.

விஜ்ஞா :—ஆம்; அதுதான் உண்மை. அப்புருஷோத்தமன் இப்போது உன்னை எவ்வித உபாயத்தினால் அடையலாம் என்னும் ஆழ்ந்த யோசனையுடன் உறங்கித் தவிக்கிறார். [யோகாஸநத்தைவிட்டு எழுந்திருந்து] அதிருக்கட்டும்; இப்போது அதைப்பற்றி என்ன? அந்தத் தாமரைக் கண்ணனுடைய உள்ளத்தையே கொள்ளைகொண்ட பாக்யசாலியே! அன்னை மஹா லக்ஷ்மியைப் போல் நீயும் அவ்வெம்பெருமான் மனதிற்குகந்த காதலியாய் வாழப் போகிறாய்.

ஸகிகள் :—அவ்விதமே ஆகக்கடவது. தங்களுடைய அநுக்ரஹ மஹிமையினால் பகவதியின் ஆசீர்வாதம் பலிக்காமல் போவதுமுண்டோ?

விஜ்ஞா :—[மேற்குத் திக்கை நோக்கி] அடடா! சகுநம் பார்க்கும் ஸ்வாரஸ்யத்தில் நேரம் சென்றதே தெரியவில்லையே! ஸந்த்யாகால மல்லவோ நெருங்கிவிட்டது!

ஸூர்ய பகவான் பகல் முழுவதும் அம்பர வீதியில் நின்று இருள் என்னும் ம்ருகத்தை வேட்டையாடி அஸ்த பர்வதத்தை அடைந்தார். அவ்விடமிருந்து மேற்குத் திக்காகிற பெண்மணியின்மேல் மிக்க மையல் உற்றவர் போல் அவ்விடம் செல்ல ப்ரயத்நப்படுகிறார்.

ஸகிகள் :—ஆஹா! பகவதிக்கு ஸந்த்யா கால மல்லவோ நேரிட்டது! நமது ஸ்வாரஸ்ய ஸம்பாஷணைக்கு எங்கிருந்து இது தடையாய்க் குறுக்கிட்டது?

விஜ்ஞா :—வத்ஸே! வாஸந்திகா! ஸந்த்யா காலம் தாண்டுகிறது. அவ் வேளையில் செய்யும் பூஜையைக் காலம் மீறாமல் செய்யவேண்டியது கடமை. போய்வருகிறேன். [மறைகிறாள்.]

வாஸந்திகா :—எனக்கென்னவோ ஒன்றிலும் நம்பிக்கை இல்லை. முத லில் வந தேவதையின் பத்ரிகை; அடுத்தபடியாக பகவான் கனவில் ஸேவை ஸாதித்தது; இப்பொழுது கேட்ட பகவதியின் சகுநம்; இவை அனைத்தும் எனக்கு ஆசை காட்டி மோசம் செய்வதின்பொருட்டே யன்றி வேறில்லை. இது என்ன மாயமந்த்ரமோ? இந்த்ர ஜாலமோ? யார் அறிவார்?

சதுரிகா :—தோழி! வாஸந்திகா! இது என்ன உன் மதி? பூர்வ ஜந்மத்தில் நீ புரிந்த ஸுக்ருதம் பலனளிக்கும் காலம் ஸமீபித்தது. திவ்ய த்ருஷ்டி ப்ரபாவத்தினால் பகவதி ப்ரத்யக்ஷத்தில் பார்த்துச் சொல்லிய வார்த்தை யில் கூடவா அவநம்பிக்கை? அவ்வன்னை பூர்வம் நடந்த வ்ருத்தாந்தங்களைக் கூறியதில் ஏதேனும் அஸத்ய முண்டா? ஆகையால் இனி நடக்கப்போவ தாகப் புகன்றவை அனைத்தும் பலித்தே தீரும். இதில் சற்றும் ஐயம் வேண் டாம்; அவச்யம் எம்பெருமான் உன்னைப் பரிக்ரஹிப்பார். இனி உன் கவலையை அறவே ஒழி. ஸந்த்யாகால மாகியதால் சிறு பெண்களாகிய நாம் தனிமையில் இங்கிருப்பது தகாது. ஆகையால் அந்தப்புரத்தை நாடிச் செல்வோம். [மூவரும் மறைகின்றனர்]

இரண்டாவது அங்கம் முற்றிற்று.

3-ம் அங்கம்—1-ம் காட்சி.

[அரங்கத்தில் மாயாமயனும் சாம்பரியும் ப்ரவேசிக்கின்றனர்.]

சாம்பரி :—அன்பா! இன்று என் தங்கள் வருகைக்கு இவ்வளவு தாமதம்?

மாயா :—ப்ரியே! வேறு எனக்கென்ன கார்யம் அஹோபிலஸ்வாமியின் திவ்ய ஸேவையைக் காட்டில்.

சாம்பரி :—ஆம்; அவ்விஷயம் யானும் அறிவேன். ஆனால் ப்ரதிதினத் தைக் காட்டில் இன்று எம்பெருமான் ஸேவை விளம்ப மாவதற்கு என்ன காரணம்?

மாயா :—ப்ரியே! இதில் என்ன ரஹஸ்யம்? அனைவரும் அறிந்த விஷயந்தான் இது. அன்றொரு நாள் பகவான் விநோதார்த்தம் வேட்டைக் குச் சென்றார். அத்தருணம் லக்ஷ்மீ தேவியை ஒக்கும் ஸௌந்தர்யம் வாய்ந்த

ஒரு ஸ்பரப் பெண்ணைக் கண்டார். அவ்வளவுதான். அக்கந்நிகையின்பால் தீரா மையல் கொண்டார். அளவு கடந்து வருந்துகிறார்.

சாம்பரி:—ஆம்; இவ்ருத்தாந்தம் யானும் அறிவேன். 'வேட்டைக்குச் சென்ற தினம்முதல் பகவான் விரஹ தாபம் தாங்காமல் மிகவும் வருந்துகிறார்' என்று லக்ஷ்மீ தேவியும் அத்யந்தம் கவலையுடன் கூறினார். ஆனால் புருஷோத்தமன் எவ்விதம் அவ்வேடுவப் பெண்மேல் மோஹ முற்றார்? இது என்ன விந்தை! நம்பத்தக்கதாய் இல்லையே! இது ஒரு தேவ ரஹஸ்யம். த்ராக்ஷைக் கனியைப் புசித்துத் திகட்டியதுபோலும் இலந்தைக் கனியை நாடுகிறார்.

மாயா:—[ஸந்தேஹத்துடன்] ஆனால் தேவியும் அறிவாரா எம்பெருமான் மோஹவலையில் அகப்பட்டுத் தவிக்கும் விஷயத்தை? இது மிகவும் வருந்தத் தக்க விஷயம்.

சாம்பரி:—தேவி விஷயத்தை அறிந்தவுடன் வாளா இருந்தனரா? இல்லை; பகவான் எக்கந்நிகையின்மேல் காதலுற்றார் என்னும் ஸமாசாரம் அறிவதன் பொருட்டுத் தன் ஸஹோதரன் ஸுதாகரனுக்குப் பத்ரிகை அனுப்பியிருக்கிறார். அவனன்றோ அவ்வநபாலகன்? அவன் உளவு விசாரித்து எழுதுவான்.

மாயா:—விஷயம் தெரிந்துதான் என்ன பயன்? எம்பெருமான் மனமாகிய மான் ஸம்பராஸுரனுக்கு வைரியாகிய மந்மதனுடைய மோஹ வலையில் கட்டுண்டது. அதை மீட்கப் பெண் மானாகிய ஸ்ரீதேவியினால் எவ்விதம் ஸாதயம்? ஸிம்ஹத்தின் மனத்தை மாற்ற மான் திறமையுடையதோ? நீயே சற்று ஆலோசித்துப் பார்.

சாம்பரி:—ஆனால் எம்பெருமான் அப்பெண்மணிபால் கொண்ட பேராவலைத் தணிப்பது அஸாத்யம் என்று எண்ணுகிறீர்கள்? அதை நீக்குவதின் பொருட்டு ஏதேனும் உபாயம் சிந்திக்கலாகாதா? தேவி மனம் ஸஹிக்குமா?

மாயா:—பேதைப் பெண்ணே! என்ன கேள்வி கேட்கிறாய்? இப்பொழுது அவர் ஸ்திதியைக் கண்ணால் கண்டால் என்ன செய்வாய் தெரியுமோ? உடனே சற்றும் தாமதமின்றி அப்பெண்ணை எப்பாடு பட்டாகிலும் மணஞ்செய்து வைத்து மறுகார்யம் பார்ப்பாய்; அவர் விரஹ வேகத்தின் வைபவத்தைச் சிறிது வர்ணிக்கிறேன் கேள்.

இந்த்ரன் பக்தியுடன் வந்து வழிபடுகிறான். பகவான் அவனைக் கடாக்ஷித்து ஏதேனும் ஆசீர்வாதம் செய்தருள்கிறாரா? இல்லவே யில்லை. ப்ரஹ்மதேவன் வரவைக் கண்டால் பகவானுக்குச் சந்த்ரனைக் கண்ட ஸாகரம் போல் ஆநந்தம் பொங்கும். அவருக்கு நல்வரவு கூறுவதோ அல்லது தனது அங்கீகார ஸூசகமாகிய திருமுடியை அசக்குவதோ ஒன்றும் கிடையாது.

அது போகட்டும்; ப்ரஹஸ்பதியினிடம் பகவானுக்கு எவ்வளவு பஹுமானம்! அவர் எதிரில் நின்று அத்யத்புதமாய் ஸ்துதிக்கிறார். அதில் ஸ்வல்பமும் ஆதரவோ அபிமானமோ ஒன்றையும் காணேம். நாககந்நிகைகள் எம்பெருமான் எதிரில் அதிமனோஹரமாய் நர்த்தனம் புரிகின்றனர். அதில் மனம் சென்றால் தானே! அவர்களைக் கௌரவிக்கும் அடையாளங்கூட திருமுகத்தில் தென்படவில்லையே! இவைகள் இருக்கட்டும். கான ப்ரியன் அல்லவா பகவான்? நாரத முனிவரின் வீணுகான மென்றால் உயிர். இப்பொழுதோ அக்கானத்தை அவர் கொஞ்சமும் ச்லாகிப்பது மில்லை; அதை ஆதரவுடன் செவிச்சாய்ப்பது மில்லை. இவைகள் அனைத்தும் ஒருபுறம் இருக்கட்டும். அன்னை லக்ஷ்மி அருகி லிருப்பதையாகிலும் கவனிக்கவேண்டாமா? அவளிடமாகிலும் சற்று லஜ்ஜை அச்சம் உண்டா? அதுகூட இல்லையே! இதுவல்லவோ விந்தையிலும் விந்தை! ஸ்வாமியின் விரஹ வேகம் எவ்வித முள்ள தென்பதை அறிந்து கொண்டனையா?

சாம்பரி:—ஆம்; தடுக்கவொண்ணுத காதல் நோய் என அறிந்தேன். ஆனல் பகவானுக்கு இப்பொழுது என்ன உத்தேசம்? எவ்வுபாயத்தினுல் அப்பெண்மணியை அடையும் ஆலோசனை?

மாயா:—[முகத்தில் மந்தஹாஸம் தோன்ற] எவ்விதம் புகல்வேன் எனது அத்ருஷ்டத்தை! நாரதர் முதலிய அநேக மஹர்ஷிகள் தேவர்ஷிகள் பகவதாஜ்ஞையை ஶிரஸா வஹித்துக் கைகட்டிக் காத்து நிற்கின்றனர். அம்மஹான்களோ தங்கள் ப்ரபாவத்தினுல் சேராதவைகளையும் சேர்த்து வைக்கும் ஸாமர்த்யசாலிகள். அவ்விதமிருக்க: எம்பெருமானுக்கு என்னிடத்தில் தான் என்ன க்ருபை! என்ன வாத்ஸல்யம்! என்னை ஒரு பொருளாக மதித்து அழைப்பித்து ரஹஸ்யமாய்ச் செவியில் இவ்விதம் புகன்றார்.

[சாம்பரியின் காதில் கூறுகிறாள்.]

சாம்பரி:—ஆஹா! ஆச்சர்யம்! பகவான் அவளை அடைவதற்குச் செய்த உபாயம் அத்யந்தம் ச்லாக்யம். ஸர்வேச்வரன் ஸாமர்த்யமும் சாதுர்யமும் யாரால் அளவிட முடியும்? ‘அக்கந்நிகை அந்தப்புரத்திலிருந்து வெளி வருவாளாகில் எப்படியும் தங்களுக்குள் அந்யோந்ய ஸம்பாஷணை உண்டாகும்; ஒருவர் உள்ளத்தை மற்றவர் அறியும் ஸந்தர்ப்பம் நேரிடும்; காதல் வளரும் மார்க்கம் ஏற்படும்’ என்னும் எண்ணம்போலும்.

மாயா:—ஆம்; வாஸ்தவம்; அதற்கென்ன ஸம்சயம்? ஆகவே நான் இப்பொழுது பகவதாஜ்ஞையைத் தாமதமின்றி நிறைவேற்றச் செல்லுகிறேன்.

[இருவரும் மறைகின்றனர்.]

மூன்றுவது அங்கம் முதல் காட்சி முற்றிற்று.

3-ம் அங்கம்–2-ம் காட்சி.

[அரங்கத்தில் முதிர்ச்சி யடைந்த விரஹ தாபத்துடன் பகவானும், விதூஷகனும் தோன்றுகின்றனர்.]

பகவான்:—[ஏதோ பழைய ஞாபகம் வந்ததுபோல] அடடா! என்ன செய்வேன்! அவ்வசிரையின் உருவம் என் மனக்கண்ணை விட்டுச் சற்றும் அகலவில்லையே! என்னே அவள் புநிதமாகிய வ்ரதக் கோலம்! என்ன ஸௌந்தர்யம்! என்ன லாவண்யம்! தங்கக் கொடியை நிகர்க்கும் அவள் தேஹ காந்தியும், அப்பொழுதுதான் நீராடிய நீண்ட கூந்தல் அழகும், அதில் நுனியில் முடிக்கப்பட்ட மலர்க் கொத்தின் நறுமணமும், என் கண்களையும் கருத்தையும் ஒருமிக்க அபஹரித்தனவே! அத்தகைய அழகுக் கடலாகிய அவளுடைய மேனியை மறுபடியும் எப்பொழுது காண்பேன்! மேலும் அவள் அழகிற்கு நிகராக எப்பொருள்களைத்தான் கூறலாம்! அவள் அருகிலும் நாடாத அவகுணங்களையுடைய வஸ்துக்கள் எவ்விதம் அவள் ஸாம்யத்தை அடையும்? இப்பொழுது ஒவ்வொன்றாக யோசித்துப் பார்ப்போம். முழுமதியை ஒக்கும் முகம் என்று அவளது முகத்தை வர்ணிப்போமாகில், அது கொஞ்சமும் பொருந்தாது. ஏனெனில்: குருத்ரோகியாகிய சந்த்ரன் எங்கே? ஸதீமணியாகிய இப்பெண்மணி எங்கே? குயிலை நிகர்க்கும் மதுரம் ததும்பும் குரல் என்று அவள் கானத்தைப் புகழ்வோமாகில் அதுவும் பொருந்துவதாயில்லை. அவைகள் ஸதா கிளைக்குக் கிளை தாவி ஸஞ்சரிக்கும் ஸ்வபாவமுள்ளவைகள். மேலும் மாரிக் காலத்தில் அவைகளின் குரல் இனிமையாயிராதென்று கூறப்படுகிறது. அத்தகைய பக்ஷிகள் இப்பாவைக்கு எவ்விதம் நிகராகும்? போகட்டும்; மத்தகஜம் போன்ற நடையழகி என்று புகழலாம்; அதுவும் பொருந்தாது. அவைகள் மண்டையில் புத்தி என்பது லவலேசமும் இல்லையே. இவளோ மஹாமேதாவி; புத்திக் களஞ்சியம். அதையும் கழித்துத் தள்ளுவோம். அதுவும் உவமையாகாது. அவள் சுருண்டு இருண்டு அடர்ந்த கூந்தலுக்கு ஒப்பாகக் கருவண்டுகளைக் கூறலாம் என்றால், அவைகள் இருந்த இடமிராமல் புஷ்பத்திலிருந்து புஷ்பத்திற்குத் தாவும் சபல சித்தமுடையவை. இப்பெண்ணோ ஸ்திர மதி வாய்ந்தவள். ஆகையால் அதுவும் சரியல்ல. அடடா! என்ன செய்வேன்! எனக்கு ஒன்று தோன்றுகிறது. அநேகமாய் மன்மதன் அவளுடைய கண்களில் ஆக்நேயாஸ்த்ரத்தை அமைத்துள்ளான் போலும். இல்லையேல் அக்கண்களை நினைக்கும்போது எனக்கு ஏன் இவ்வளவு ஸந்தாபம் உண்டாகிறது?

விதூ:—[மனத்திற்குள்] ஆச்சர்யம்! பகவானுக்கு மதந ஜ்வரம் மேன்மேலும் விஷம் ஏறுவதுபோல் ஏறுகிறது. [வெளிப்படையாக] தேவா! இப்பொழுது தாங்கள் கருடாசலத்திற்கு ஸமீபத்திலிருக்கும் நந்தவநத்திற்குச் செல்வது நலம். அவ்விடம் ப்ரவஹிக்கும் பவநாசிநீ நதியின் குளிர்ந்த ஜலத் திவலைகளினால் சற்றுத் தாபம் தணியும்.

பக:—நண்பா! நீ எவ்விதம் சொல்லுகிருயோ அவ்விதமே செய்வோம். அவ்வநத்திற்குச் செல்லும் மார்க்கத்தைச் சற்றுக் காட்டு.

விதூ:—ப்ரபோ! இதோ அம்மார்க்கம்; இந்தப் பக்கமாகச் செல்ல வேண்டும்.

பக:—[மூன்று நான்கு அடி நடந்து முன் பக்கம் பார்த்து] நண்பா! இதோ பார்; வேதகிரிக்கும் கருடாசலத்திற்கும் இடையிலுள்ள ப்ரதேசத்தை யடைந்தோம். இம்மலையின் தாழ்வரைகளில் சுற்றிலும் பவநாசிநீ நதி தெளிந்து கலகல வென்று அரித்தோடுகிறது. ஆகவே வநலக்ஷ்மி ஸர்வதா இங்குத் தாண்டவ மாடுகிருள். இதோ அப்பூங்காவனத்தை யடைந் தோம். [அதற்குள் ப்ரவேசிப்பதாக நடித்து] தோழா! இதோ பார்; இவ் வநத்தில் ஸஞ்சரிக்கும் பிராணிகளுக்கு இவ்விடத்திலேயே ராஜோபசாரங்கள் கிடைக்கின்றன. சொல்லுகிறேன் கேள். மலய பர்வதத்திலிருந்து வீசும் மந்தமாருதமானது ப்ரபுவிற்கு விசிறிக் கைங்கர்யத்தைச் செய்கின்றது. இம் மாமரத்தில் கும்பல் கும்பலாகத் தோன்றும் மொக்குக்கள் அரசனுக்கு வெண் குடை பிடிக்கும் உபசாரத்தைச் செய்கின்றன. ஸ்துதி பாடகர்கள் யார் என்று எண்ணுகிருய்? இக்குயில் கூட்டங்களே. இவைகளேயன்ருே அரசனுக்குக் கட்டியம் கூறவேண்டும்? இதோ திரள் திரளாகக் காநம் செய் யும் இவ்வண்டுகளைத் தவிர மற்றும் எவை வேண்டும்? [மற்ருெரு பக்கம் நோக்கி] அடாடா! ம்ருகங்கள்கூட க்ரஹஸ் தாச்ரம தர்மத்தை எவ்வளவு விமர்சையாய் நடத்துகின்றன! இக்குயில்கள் தங்கள் பார்யைகளுடன்கூட கிளைக்குக் கிளை தாவி இளந் தளிர்களைச் சேகரித்து வருகின்றன. அவைகளை முதன்முதலில் தங்கள் குழந்தைகளுக்கு ஊட்டி மிகுந்ததைத் தாங்கள் புசிக கின்றன. பிறகு பக்கத்திலிருக்கும் பெருங் கிளைகளையே தங்களுக்கு வாஸ ஸ்தாநமாகக் கொண்டு ஆநந்தமாய் வஸிக்கின்றன.

விதூ:—இதோ இவ்விடத்திலும் கூடக் கொடிகள் தாங்காமல் புஷ்பங் கள் பூத்துத் தொங்குகின்றன. அவைகளிலிருந்து தேன் பெருகிப் பாத்திகளில் தங்கி நிறைந்து ததும்புகிறது. அதில் அப்புஷ்பங்கள் ப்ரதிபலிக்கின்றன. அதைக் கண்டு மகிழ்ந்த வண்டுகள் வயிருரப் பருகிக் களித்து, மேலும் அப்பாத் திக்குள் புஷ்ப மிருப்பதாக எண்ணிச் சுற்றிலும் வட்டமிட்டு ரீங்கார த்வநி செய்கின்றன. இந்த ஸௌந்தர்யத்தையும் பகவான் சற்றுக் கவனிக்க வேண்டும்.

பகவா:—[புன்சிரிப்புடன்] அடா! எதை நோக்கினுலும் இவ்விதமே தோன்றுகிறது. ப்ராணிகளிடத்திலும்கூட மநுஷ்ய தர்மத்தை ஏறிடுகிருயே! [சுற்றுமுற்றும் நோக்கி] ஆராக் காதல் கொண்டு நான் என்ன செய்வேன்? இவ்வனத்திலிருக்கும் ஒவ்வொரு வஸ்துவிலும் என் காதலியின் உருவையே காண்கிறேன். ஒவ்வொரு மொட்டுக்களிடமும் அவளுடைய ஸ்தநத்தின் அழகு, மாங்களின் ஒவ்வொரு தளிர்களிடமும் என் வல்லபையின் பாதத்தின்

29246

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '48 ஏப்ரல்மீ-த்துச் சந்தா வஸூலில்

			ரூ.
8	ஸ்ரீ.	ராகவாசாரி, பம்பாய்	3
25	,,	T. K. ராமஸ்வாமி ஐயங்கார், பம்பாய்	3
47	,,	S. வரதாசார்யர், பம்பாய்	3
89	,,	ராமையங்கார், ப்ளீடர், கரூர்	6
102	,,	K. ரகுநாதையங்கார், ஆடுதுறை	3
233	,,	M. ராஜகோபாலன், உத்தர்ப்பூரா	6
251	,,	N. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கரூர்	[illegible]
393	,,	S. ராகவையங்கார், அம்மாமண்டபம் ரோட், ஸ்ரீரங்கம் ...	3
550	,,	A. S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மேல் மாம்பலம் ...,	3
684	,,	B. ரங்கஸாமி ஐயங்கார், காஞ்சீபுரம்	3
793	,,	V. C. க்ருஷ்ணஸ்வாமி, திருவல்லிக்கேணி ...	3
806	,,	U. திருவேங்கடாசார்யர், பேரங்கியூர்	3
809	,,	G. கோமாண்டூர். கோபாலக்ருஷ்ணமாசார்யர், அக்ரஹாரம், குண்டூர் ...	3
		மொத்தம் ரூ.	45

[குறிப்பு] சென்ற மாதத்து ஸஞ்சிகையில் வெளிவந்துள்ள சந்தாப் பட்டியலில் "801... ஸ்ரீ. S. ரங்கஸ்வாமி ஐயங்கார்...மாதுங்கா" என்பதை "801... ஸ்ரீ. L. ரங்கஸ்வாமி ஐயங்கார்... மாதுங்கா" என்று திருத்திப் படிக்க வேண்டுகிறோம். [ஸம்.]

Regd. M. 4437.

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ	மற்றவர்கட்கு ரூ. அ.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12	1—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0–12
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0	1—8
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8	0–12
6.	ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8.	ஈஶாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8
9.	ஸ்ரீ காமாஸிகாஷ்டகம், ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரம் [க்ரந்த லிபி ; தமிழ் உரையுடன்]	0—7	0—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.